IIIT

# இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்

தாஹா ஜாபிர் அல்-அல்வானீ

# இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்

தாஹா ஜாபிர் அல்-அல்வானி

*தமிழில்*

ஸெய்யித் முஹம்மத் பாரூக்

*செம்மையாக்கம்*

ஹாபிஸ் இஸ்ஸதீன்

**Islaathil Kutram Sumaththappattavarin Urimaigal**

Tamil edition of
The Rights of the Accused in Islam
By
**Taha Jabir al-Alwani**

Translated by
Syed Muhammad Farook

Edited by Hafiz Issadeen

With the permission of
The International Institute of Islamic Thought
P.O. Box 669. Herndon,VA 20172, USA
www.iiit.org

London Office
P.O. Box126, Richmond, Surrey TW92UD, UK
www.iiituk.com

ISBN 978 955 8398 51 7

Published by
Fuzin Texts
23/3, Market Road, Dharga Town-12090, Sri Lanka

Cover design by Azar Wazeer

Printed by Millennium Graphics, Maharagama

©Abd-al-Jabbar Muhammad Zaneer -2018

# பதிப்புரை

*கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி (1935-2016) அவர்களது 'குர் ஆனும் ஸுன்னாவும் - கால இட பரிமாணங்கள்', 'இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம்', முரண்படுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்', 'இஸ்லாத்தில் மதம் மாறுதல்' ஆகிய ஆக்கங்களை ஏற்கனவே நாங்கள் தந்துள்ளோம்.*

*'இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்' எனும் இந்த ஆக்கத்தின் ஆங்கில வடிவம்* International Institute of Islamic Thought (IIIT) வெளியிடும் American Journal of Islamic Social Sciences *காலாண்டுச் சஞ்சிகையின் மலர் 11, இதழ்கள்3,4 வெளியீடுகளில் பிரசுரமான இரண்டு கட்டுரைகளின் தமிழ் வடிவமாகும்.*

*எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக.*

**Fuzin Texts**

23/3, Market Road,
Dharga Town-12090
Sri Lanka

*மே 2018*

**வாசகர் கடன்**

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமா தானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும் அண்ணலாரின் தோழர்கள் யாரேனும் குறிப்பிடப்படும் போது றழியல்லாஹு அன்ஹு/அன்ஹா/அன்ஹும் (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப் படும் போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.*

# இஸ்லாத்தில்
# குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்

**அறிமுகம்:**

ஒரு சமய நம்பிக்கை என்ற வகையிலும் வாழ்க்கை முறை என்ற வகையிலும் நீதியை நிலைநாட்டுவதையும் அநீதியை ஒழிப்பதையும் இஸ்லாம் தன் பிரதான இலட்சியங்களுள் ஒன்றாகக் கொண்டுள்ளது. நீதி என்பது எல்லாச் சூழல்களுக்கும் எல்லாக் காலங்களுக்குமான இலக்கொன்றாகவே விளங்குகிறது. அது ஒருவரின் விருப்பு, வெறுப்புக் களினாலோ அவருக்கு இருக்கின்ற (அல்லது இல்லாதிருக்கின்ற) இரத்த உறவுகளினாலோ பாதிக்கப்படக் கூடியதன்று.

*"நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும் நன்மை செய்யுமாறும் ஏவுகின்றான்"(குர்ஆன் 16:90). "உங்களுக்கிடையில் நீதமாகத் தீர்ப்பளிக் குமாறு நான் கட்டளையிடப் பட்டுள்ளேன்"(42:15)* மேலும் *"எந்த சமூகத்தவரின் குரோதமும் நீங்கள் நீதமாக நடந்துகொள்ளாதிருக்க உங்களைத் தூண்டிவிட வேண்டாம். (எவ்வளவு விரோதமிருந்தபோதி லும்) நீங்கள் நீதமாக நடந்து கொள்ளுங்கள். அதுவே பயபக்திக்கு நெருக்கமானதாகும்"(5:8).* ஸுன்னாஹ்விலும் நீதியை ஏவி அநியாயத் தைத் தடுக்கின்ற ஹதீஸ்கள் அநேகம் உண்டு. நீதியை நிலைநாட்டுதல் மனித இயல்புக்கு இசைவான குறிக்கோள்களுள் ஒன்றாக இருக்கிறது. அதற்கு மறுதலையான அநீதி மனிதர்களால் இயல்பாகவே வெறுக்கப் படும் ஒன்றாகும்.

நீதியை அறிந்து கொள்வதற்கும், அதனை அதற்கு நேர்மாற்றமான அநீதியிலிருந்து வேறுபிரித்தறிவதற்கும் உரியதான வழி வகைகளை அல்லாஹ் நிறுவியுள்ளான். அனைத்து மக்களும் இந்தக் குறிக்கோளை அடைவதற்கான வழிகளை அவன் தெளிவாக்கியுள்ளதோடு அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிமுறைகளை எளிதாக்கி, அவற்றை மனிதர்களுக்குச் சுட்டிக் காட்டியும் இருக்கின்றான். அவற்றுள் மிக முக்கியமானது 'காதா' என்னும் நீதி நிறுவனமாகும்.

*“மனிதர்கள் நீதியைக்கொண்டு நிலைத்திருப்பதற்காக”(57:25) சட்டத்தீர்ப்பு நிறுவனத்தை அல்லாஹ் பரிந்துரைத்துள்ளான். இந்த நிறுவனம் எல்லா விவகாரங்களும் ஒரேவித பிரமாணங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் ஒருவர் இன்னொருவருடைய உயிருக்கோ உடைமைக்கோ அநீதி யிழைப்பதை சாத்தியமற்றதாக்கிவிடுகிறது. இதன் விளைவாக எல்லா மக்களும் சமாதானம், நீதி என்பவற்றின் நிழலில் வாழ்வர். அங்கு அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு அவர்களின் இதயங் களும் ஆன்மாக்களும் உயிர்களும் உடைமைகளும் கண்ணியமும் திருப்தியில் ஆழ்ந்திருக்கும்.*

## நீதித்துறையின் வரலாற்றுரீதியான வளர்ச்சி

*நபி (ஸல்) அவர்கள் முதலாவது இஸ்லாமிய அரசை மதீனாவில் நிறுவியதன் மூலம் நீதித்துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று முதல் அது ஓர் உறுதியான மதக்கடமையாகவும் வணக்கமுறையாகவும் இருந்துவந்துள்ளது. முஹாஜிரூன், அன்ஸார் ஆகிய இரு முஸ்லிம் தரப் பினருக்கும், அயலவர்களான யூதர் மற்றும் பல்தெய்வ வழிபாட்டாளர் களுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இதனைத் தெளி வாக்குகின்றது. சீர்கேட்டில் முடியுமென அஞ்சப்படும் எந்தவொரு நிகழ்வும் அல்லது கிளர்ச்சியும் அல்லாஹ்வினதும் அவனது தூதரான முஹம்மதினதும் தீர்ப்புக்கு விடப்படுதல் வேண்டுமென உடன்படிக் கையில் எழுதப்பட்டிருந்தது.[1]*

*நபிகளாரின் ஆட்சியின்போது மதீனா பிரதேசம் சிறியதாகவும், சமூகத்தின் சட்டப்பிரச்சினைகள் சொற்பமானவையாகவும் சிக்கலற்ற வையாகவும் காணப்பட்டன. எனவே, ஒரேயொரு நீதிபதியே (காதி) தேவைப்பட்டார். நபிகளாரே அதனைப் பொறுப்பேற்றார்கள். ஆனால் முஸ்லிம்களின் ஆட்சியெல்லைகள் விரிவடையத் தொடங்கியதும் நபிகளார் நீதித்துறைப் பொறுப்புகளைத் தமது ஆளுநர் சிலரிடம் ஒப்படைத்தார்கள். வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கத் தம் தோழர்கள் சிலரை அனுமதித்தார்கள். மக்களுக்கு நீதி வழங்குமாறும் நேர்மையீனத்தை எதிர்க்குமாறும் அறிவுறுத்தி அவர்களை பல்வேறு*

---

1. பார்க்க: ஹஸன் இப்றாஹீமின் *தாரீக் அல் இஸ்லாம் அல் ஸியாஸீ*, பாகம் 1, 102.

*பிரதேசங்களுக்கும் அனுப்பிவைத்தார்கள். அலி (றழி) யெமனுக்கு நீதிபதியாக அனுப்பிவைக்கப்பட்டார். அபூ மூஸா, முஆத் போன்ற ஏனைய தோழர்களும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.*[2] *நபிகளாரின் தீர்ப்புகள் எப்போதும் அல்லாஹ்வினால் அன்னாருக்கு அருளப்பட்டவைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.*

*பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிணக்குற்ற இரு தரப்பினரும் தம் வழக்கை நபிகளாரிடம் சமர்ப்பிப்பதற்குச் சம்மதிப்பர். நபிகளார் இரு தரப்பினரது கூற்றுக்களுக்கும் செவிமடுத்துவிட்டு புறவயமானவற்றின் (அதாவது சான்றுகளின் சாட்சியங்களின்) அடிப்படையில் மாத்திரமே தாம் தீர்ப்பு வழங்குவதாக அறிவிப்பார்கள்.*[3] *தடுக்கப்பட்டதை அனுமதிப்பதற்காகவோ அனுமதிக்கப்பட்டதைத் தடுப்பதற்காகவோ தாம் வழங்கும் தீர்ப்புகள் எடுத்தாளப்படக் கூடாதென்பதை விளக்குவதில் நபிகளார் மிகுந்த கவனஞ் செலுத்துவார்கள். பிரதிவாதம், மறுதலிப்பு என்பவற்றின் வழிமுறைகளையும் நிரூபணத்தையும சான்றுகளையும் விளங்கப்படுத்துவார்கள்.*[4] *"நிரூபிப்பது வாதியின் பொறுப்பு; அதே வேளை பிரதிவாதிக்குச் சத்தியப்பிரமாணம் ஒன்றே போதுமானது."*[5] *குற்றத்தை ஒப்புக்கொள்வதென்பது அதன் சகல நிபந்தனைகளோடும் குற்றத்தை ஒப்புக்கொள்பவருக்கு எதிரான நிரூபணமாகும். தகராறுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் விசாரிக்கப்படாமல் எந்தவொரு தீர்ப்பும் வழங்கப்படக் கூடாது. எந்தவொரு தரப்பினருக்கும் சாதகமாகவோ பாதகமாகவோ சாட்சியங்களைச் சேகரிப்பதற்கும் சரிபார்ப்பதற்கும் தேவையான செயன்முறை எதுவும் நபிகளாரிடம் இருக்கவில்லை.*

---

2. ஹஸன் இப்றாஹீமின் *தாரீக் அல் இஸ்லாம் அல் ஸியாஸீ* பாகம் 1, 458

3. நபி(ஸல்) கூறினார்கள்: "நான் வெளிப்படையானவற்றைக் கொண்டு தீர்ப்பளிக்கின்றேன."அநேக ஹதீஸ்களிலிருந்து இதே கருத்தைப் பெற முடியும். இவற்றுள் பல ஆதாரபூர்வமானவை. விபரங்களுக்கு பார்க்க: ஆசிரியர் பதிப்பித்த "ராஸியின் *அல் மஹ்ஸூல் (முஆஸஸத் அல் ரிஸாலா* 1992) 80-83 அடிக்குறிப்புகள்

4. இந்த ஹதீஸ் திர்மிதி, அபூ தாவுத், அல் நஸாயீ, அல் பைஹக்கீ, அல் ஹாக்கிம் முதலியோரால் அறிவிக்கப்பட்டுள்ளது. பார்க்க: சவுக்கானீயின் *நய்லில் அல் அவ்தார்* (பெய்ரூத்: தார் அல் ஜீல்) பாகம் 9, 220

5. 'உறுதிப்படுத்துபவருக்கு சாட்சியம்; மறுப்பவருக்கு சத்தியப் பிரமாணம்' என்பது பொதுவான சட்டக் கோட்பாடு. எனவே நிரூபிக்கும் பொறுப்பு உறுதிப்படுத்துபவருடைய /வாதியுடைய பொறுப்பாகும்.

*நபிகளார் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின் (கலீஃபாவாக) ஆட்சிப் பொறுப்பேற்ற அபூபக்கர் (றழி) நீதித்துறையின் பொறுப்பை உமர் இப்ன் கத்தாப் (றழி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். உமர் கண்டிப்பானவர் எனப் பெயர் பெற்றிருந்தமையால் எந்தவொரு வழக்கும் விசாரணைக்கு வராமல் இரண்டாண்டுகள் கழிந்தன. எனினும் உமர் (றழி) கலீஃபாவாகப் பதவியேற்றதும் நிலைமை மாறியது. உமரின் ஆட்சியின்போது பிரதான படையெடுப்புக்கள் இடம் பெற்று இஸ் லாமிய அரசின் ஆட்சிப்பரப்பு விசாலமாகியது. இதனால் முதன் முறையாக சட்டப்பிரச்சினைகள் தலைதூக்கலாயின. இதன் எதிர் வினையாக உமர் (றழி) நீதித்துறையை நிறுவனமயமாக்குவதற்கு அடித்தளம் அமைத்தார். ஆட்சியாளரால் சில பிரமாணங்களின் அடிப் படையில் நீதிபதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள் ஆட்சியாள ரின் பிரதிநிதியாகப் பணியாற்றி வழக்குகளை விசாரித்து, பிணக்கு களின் போது நடுவர்களாக இருந்து சட்டத்தீர்ப்புகளை வழங்கினர். உமர் (றழி) மதீனாவின் நீதிபதியாக அபூ அல் தர்தாவையும், கூஃபாவின் நீதிபதியாக சுறைஹ் இப்னு அல் ஹாரித் அல் கிந்தியையும், பஸ்ராவின் நீதியரசராக அபூ மூஸா அல் அஷ் அரீயையும், எகிப்தின் நீதிபதியாக உத்மான் இப்னு கைஸையும் நியமித்தார். ஷாமின் ஆட்சிப்பரப்புக்குத் தனியான நிறுவனமொன்று அமைக்கப்பட்டது.*

*உமர் (றழி) தம் நீதிபதிகள் பின்பற்றுவதற்கு ஏற்ற சிறந்த முன்மாதிரி யாகத் தாமே விளங்கினார். அவர்கள் அம் முன்மாதிரியிலிருந்து விலகா மல் நடக்க வேண்டுமென எச்சரிக்கையும் விடுத்தார். முஆதுக்கு எழுதிய கடிதமொன்றில் அவர் குறிப்பிடுவதாவது:*

*“நிச்சயமாக சட்டத்தீர்ப்பு என்பது நிறுவப்பட்டதோர் சன்மார்க் கக்கடமையாகும். அது முன்மாதிரியாகக்கொள்ளப்படவேண்டிய ஒரு ஸுன்னாஹ். அப்பொறுப்பு உம்மிடம் ஒப்படைக்கப்படின் ஓர் உண்மையைக் கூறும்போது அதற்கு ஆதாரம் காட்ட முடியாவிட்டால் அது பயனற்றதாகும் என்பதை நினைவிற் கொள்வீராக. உமது விசார ணைகளின்போது உமது முகத்தோற்றத்திலும் உம்முடைய தீர்ப்பு களிலும் மக்களிடையே சமாதானத்தை நிலைநாட்டுவீராக. அப்போது கண்ணியமான எவரும் உமது நியாயமின்மை குறித்து எதுவுமே*

*சொல்ல இடமிருக்காது. அத்தோடு, ஒடுக்கப்பட்ட எந்தவொரு நபரும் உம்மிடமிருந்து நியாயத்தைப் பெறுவதில் நம்பிக்கையிழந்துவிட மாட்டார்.*

*நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிக்குரியதே. பிரதிவாதிக்கு இருப்பது சத்தியப் பிரமாணமே. சட்டபூர்வமானதை (ஹலால்) தடுக்கப்பட்ட தாகவும் (ஹராம்), தடுக்கப்பட்டதை சட்டபூர்வமானதாகவும் மாற்ற முனையும் சந்தர்ப்பங்களைத் தவிர மற்றைய சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கிடையில் மத்தியஸ்தம் செய்வது சட்டபூர்வமானதே. யாரேனும் ஒருவர் ஏதேனுமொன்றுக்கு உரிமை கோரும் நிலையில், அப்பொருள் உமது முன்னிலையில் இல்லாமலும் அவரது கோரிக்கைக்கு ஆதாரமும் இல்லாதிருப்பின் அதே போன்ற பொருளொன்றை முன்வைத்து அதனை விவரிக்குமாறு அவரை வேண்டுவீராக. அவர் அதனைச் சரியாக விவரித்தால் அவருக்குரியதைக் கொடுத்து விடுவீராக. அவரால் அவ்வாறு செய்ய முடியாது போனால் அவர் விடயத்தில் வழக்கை மிகச் சிறந்த அறிவார்ந்த முறையில் தீர்த்து வைத்தவராவீர்.*

*நீர் மீளாய்வு செய்த பின், உமது புரிதலுக்கு ஏற்ப வேறெரு முடிவை எடுக்க நாடினால், உண்மை பற்றிய உமது மனமாற்றத்தை உமது முன்னைய முடிவு தடுப்பதற்கு இடம்கொடுக்காதீர். நிச்சயமாக உண்மை அழிவில்லாதது. அதனை எதனாலும் மாற்றிவிட முடியாது. தவறான ஒன்றினை நிலைநாட்ட முயற்சிப்பதை விட உங்கள் கருத்தை மாற்றிக்கொள்வதே சிறந்தது.*

*முஸ்லிம்களில் பொய்ச் சத்தியம் செய்த குற்றவாளிகளையும், 'ஹத்' தண்டனை முறையின்படி சாட்டையடிக்கு ஆளானவர்களையும், குற்றஞ்சுமத்தப்பட்டவருடன் கொண்டுள்ள உறவு காரணமாகச் சந்தேகத்துக்குரியவர்களையும் தவிர, மற்ற முஸ்லிம்கள் அனைவரும் நம்பிக்கைக்குரிய சாட்சிகளாக இருப்பர். அல்லாஹ்வுக்கு மாத்திரமே தனது அடியார்களின் ரகசியங்கள் தெரியும். அவர்களுடைய தீய செயல்களை அவனே திரையிட்டு மறைக்கின்றான் - சான்றுகள் மூலமும் சாட்சிகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டவைகளைத் தவிர.*

*குர்ஆனிலோ, ஸுன்னாஹ்விலோ குறித்துச் சொல்லப்படாத விடயமொன்று தொடர்பாகக் கேள்வி எழும் போது நீர் புரிந்துணர்வோடு நடந்துகொள்வீராக. ஒப்புவமையைப் பயன்படுத்துவீராக. உபயோகிக்*

*கப் போகும் உதாரணம் பற்றி நீர் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அடுத்து, அல்லாஹ்வை அதிகம் திருப்திப் படுத்தக்கூடியதும், உண்மைக்கு மிக நெருங்கியதுமான அபிப்பிராயத்தைக் கடைப் பிடிப்பீராக.*

*மனிதர்கள் காரணமாகக் கோபமுறுவதையும் எரிச்சலடைவதையும் நிலைதடுமாறுவதையும் தவிர்த்துக்கொள்க. வழக்கொன்றை விசாரிக் கும்போது யார் மீதும் விரோதம் பாராட்டவேண்டாம். (அல்லது குறிப்பிட்டவொரு சாரார் மீது பகைமை காட்டவேண்டாம். - இந்த விடயத்தில் இதன் அறிவிப்பாளரான அபூ உபைத் நிச்சயப்படுத்த வில்லை) ஏனெனில் சரியான தீர்ப்புக்கு அல்லாஹ்வின் வெகுமதி கிடைக்கும். அது பாராட்டிப் பேசப்படும். இவ்வாறு உண்மை தனக்கு விரோதமாக அமையக்கூடிய நிலையிலும் உண்மையை நிலைநாட்டு வதைஉள்ளார்ந்த நோக்கமாகக் கொண்ட ஒருவரைப் பொறுத்த மட்டில்அவருக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான விவகாரங்களில் அல்லாஹ்வே போதுமானவனாக இருப்பான்.*

*தன்னிடம் இல்லாததைக்கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்ளும் ஒருவரை அல்லாஹ் முகம்பார்க்க மாட்டான். ஏனெனில் அல்லாஹ்வுக்காச் செய்யப்படும் ஒன்றையே அவன் தன் அடியார் களிடமிருந்து ஏற்றுக்கொள்கிறான்.*

*எனவே இம்மை மறுமை இரண்டிலும் அல்லாஹ் தரப்போகும் வெகுமதிகளை மனதிலிருத்துவீராக.. அல்லாஹ் தனது சாந்தியையும் கருணையையும் அருள்களையும் உம்மீது சொரிவானாக!"* [6]

நேர்வழி நடந்த முதல் நான்கு கலீஃபாக்களின் காலத்தில் சட்டத் தீர்ப்பு நிறுவனம் எளிமையானதாகவும் சிக்கலற்றதாகவும் காணப் பட்டது. நீதிபதிகள் நீதிமன்ற எழுத்தர்களையோ தம் முடிவுகளின் எழுத்துப் பதிவுகளையோ கொண்டிருக்கவில்லை. அவை யாவும் ஒவ்வொரு நீதிபதியினதும் நேரடி மேற்பார்வையில் உடனடியாக நடந்தேறின. நீதிச் செயன்முறை, உரிமை கோரல்களைப் பதிவு செய்தல், நியாயாதிக்க எல்லைகளை வரையறுத்தல் அல்லதுபிற்காலத்தில்

6. பார்க்க: இப்ன் கய்யிம், *இஃலாம் அல் முவக்கியீன்*, பாகம் 1, 85; அல் மாவர்தீ, *அல் அஹ்காம் அல் ஸுல்தானீயாஹ்* 71-2; அல் பைஹக்கீ, *அல் ஸுனன் அல் குப்ரா*, பாகம் 10, 115

எழக்கூடிய ஏதேனும் விவகாரங்கள் தொடர்பாக விரிவான செய லொழுங்குகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான செம்மைப் படுத்தல் தேவைப்படும் அளவுக்கு மக்களின் வாழ்க்கை அதுவரை சிக்கலானதாக மாறி யிருக்கவில்லை. ஷரி'ஆவில்கூட எந்த விவரமும் திட்டவட்டமாகக் கூறப்படாமல் அவை இஜ்திஹாத் மூலம் தீர் மானிக்கப்படுவதற்காக விடப்பட்டிருந்தன. வேறு விதத்தில் கூறுவ தாயின், மக்களின் சூழலுக்கும் சம்பிரதாயங்களுக்கும் ஏற்றபடி நீதியமைப்பு விருத்தியடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.[7]

நேர்வழி நடந்த நான்கு கலீஃபாக்களின்கீழ் நீதித்துறை குடியியல் சார்ந்த பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. (மரண தண்டனை வழங்கக்கூடிய) கிஸாஸ், (மரணதண்டனை உட்பட தண்டனைகள் குர்ஆனினால் விதிக்கப்பட்டுள்ள) ஹுதூத், (நீதிபதி யின் அல்லது ஆட்சியாளரின் தீர்ப்பின்படி மரண தண்டனை உட்பட தண்டனை வழங்கப்படக்கூடிய) தஃஸீர் முதலிய பல்வேறுவகையான பிணக்குகள் ஆட்சியாளரால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஆளுனரால் தீர்த்துவைக்கப்பட்டன.

உமையாக்களின் காலத்தில், குறிப்பாக அவர்களது ஆரம்ப ஆட்சி யாளர்கள் காலத்தில், இந்நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க பாரிய மாற்றங் களெதுவும் நிகழ்ந்துவிடவில்லை. எனவே செயன்முறைகள் யாவும் சிக்கலற்றவையாகவே இருந்தன. நழுவிச் செல்வதை அல்லது மறதியைத் தடுக்கும் நோக்கில் தீர்ப்புகளைப் பதிவுசெய்வது மட்டுமே பிரதான முன்னேற்றமாகக் காணப்பட்டது. முஆவியா இப்னு ஸுஃப்யானின் ஆட்சியில் எகிப்தின் நீதிபதியாகவிருந்த ஸலீம் இப்ன் முயீஸ் வாரி சுரிமை தீர்ப்பொன்றை வழங்கியபோது இவ்வாறான சம்பவமொன்று நிகழ்ந்தது. வாரிசுகள் வழக்கைப் புதுப்பிப்பதற்காக நீதிபதியிடம் திரும்பி வந்தபோது அவர் தமது தீர்ப்பை எழுத்தில் பதிவுசெய்தார்.[8] இக்காலப்பகுதியில் நீதிபதியின் தகைமைகள், நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடம் என்பன பற்றிய விபரக் குறிப்புக்கள்,

---

7. பார்க்கவும் இப்னு கய்யிம், *அல் துருக் அல் ஹுக்மீயாஹ்*, 218

8. பார்க்க: *கிதாப் அல் கதா*, 309; மஹ்மூத் அர்னூஸ், *அல் கதா பீ அல் இஸ்லாம்*, 49; இப்றாஹீம் நஜீப் முஹம்மத் அவாத், *அல் நிஸாம் அல்கதாயீ*, 48

*பொதுநிர்வாகத்தில் இடம் பெறக்கூடிய அநீதிகளை விசாரிப்பதற்கான ஒரு முறைமையை விருத்தி செய்தல் என்பன தொடர்பாக இணக்கங்கள் ஏற்பட்டன.* [9]

*அப்பாஸியரின் வருகையோடு நீதித்துறையில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்படலாயின. அதன் வடிவத்திலும் செயன்முறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. பல்வேறுவகை வழக்குகளின் விசாரணைகளோடு அதன் எல்லைகள் விரிவடைந்தன. இக்காலப்பகுதியில் நீதிமன்றப் பதிவேடு அறிமுகப்படுத்தப்பட்டது. நீதிபதியின் நியாயாதிக்கப் பரப்பு அதிகரித்தது. அரசினால் பிரதம நீதிபதி (காதி அல் ஹூதா) என்ற பதவி உருவாக்கப்பட்டது. இது இன்றைய பிரதம நீதியரசர் பதவிக்கு ஒப்பானது. இக்காலப்பகுதியில் விருத்தியடைந்த எதிர்மறை அம்சம் இஜ்திஹாதில் உறுதியின்மை தலையெடுத்தமையாகும். இது, நிறுவப்பட்டிருந்த நான்கு சட்ட சிந்தனைப் பிரிவுகளின் முன்னைய தீர்ப்புகளைப் பின்பற்றுமாறு (தக்லீத் செய்தல்) நீதிபதிகளை மட்டுப்படுத்திற்று. எனவே நீதிபதிகள் ஈராக்கிலும் கிழக்குப் பிரதேசங்களிலும் இமாம் அபூ ஹனிஃபாவையும், சிரியாவிலும் ஸ்பெயினிலும் இமாம் மாலிக்கையும், எகிப்தில் இமாம் ஷாஃபியீயையும் பின்பற்றித் தீர்ப்பு வழங்கலாயினர்.* [10]

*மங்கோலியரால் பக்தாத் அழிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கி.பி. 1258ல் (ஹிஜ்ரி 606ல்) அப்பாஸிய பேரரசு வீழ்ச்சியுற்றதும், அநேக சிற்றரசுகள் தோன்றி தமக்கேயுரிய சட்ட நிறுவனங்களை உருவாக்கின. இவை நிறுவப்பட்டிருந்த அடித்தளங்களையும் அடிப்படைக் கோட்பாடுகளையும் பொறுத்தமட்டில் இவற்றுக்கிடையே அதிக வேறுபாடு காணப்படாவிடினும், ஒழுங்கமைப்பு, செயல்முறை, நீதிபதிகளை நியமிப்பதற்கும் நீக்குவதற்குமான பிரமாணங்கள், பின்பற்றப்பட்ட சட்ட சிந்தனைப் பிரிவுகள் போன்றவற்றில் முக்கிய வேறுபாடுகள் காணப்பட்டன.*

*ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டு ஸ்பெயினின் நீதித்துறையை இப்னு அல் ஹஸன் அல் நபஹீ இவ்வாறு சித்தரிக்கின்றார்: "சட்டத் தீர்ப்புக்*

---

*9. பார்க்க: இப்ன் கல்தூன், அல்முகத்திமாஹ், 741*

*10. அதே நூல் 1150; பார்க்க: இப்றாஹீம், தாரீக் அல் இஸ்லாம் அல் ஸியாஸீ, பாகம் 2, 55; பாகம் 3, 306*

*களைக் கையாளும் அதிகாரிகளாக முதலில் நீதிபதிகளும் அடுத்து மத்திய காவல்துறையினர், உள்ளூர் காவல் துறையினர், மேன்முறை யீட்டு அதிகாரி, உள்ளூர் நிர்வாகி ஆகியோரும் அவர்களை அடுத்து சந்தைக் கட்டுப்பாட்டாளரும் இருந்தனர்..''*[11] கிழக்கத்திய இஸ்லாமிய அரசு களின் சமகால நிறுவனங்கள் பற்றி விவரித்த இப்ன் அல் கய்யிம், உரிமை கோரல்கள் பற்றிய தீர்ப்புக்கள் தொடர்பாக எழுந்த கேள்விகளைக் குறிப்பிட்ட பின்னர் இவ்வாறு கூறுகின்றார்: *''உரிமை கோரல் சம்பந்தப்படாத விவகாரங்களில் அதிகாரத்தைப் பேணுதல் 'ஹிஸ்பா' எனப்படும். அதற்குப் பொறுப்பானவர் 'ஹிஸ்பா ஆணை யாளர்' என அழைக்கப்பட்டார். உண்மையில் இவ்வாறான பொறுப்பு களுக்கென விசேடமாக ஆணையாளர் ஒருவரை நியமிப்பது வழக்க மாகியிருந்தது. அதேபோன்று மேன்முறையீட்டு அதிகார சபைக்கு 'மேன்முறையீட்டு ஆணையாளர்' என்ற விசேட ஆணையாள ரொருவர் நியமிக்கப்பட்டார். அரச நிதிகளை வசூலித்தலும் செலவிடு தலும் 'வஸீர்' என்ற விசேட ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் வந்தது. அரசின் செல்வங்களை மதிப்பிடுவதற்கும் அவற்றை செலவிடு வதற்கும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் பொறுப்பானவர் நிறைவேற்று ஆணையாளர் எனப்பட்டார். சொத்துகளை வைத்திருப் போரிடமிருந்து அரசுக்குரியதை வசூலிப்பவர் அறவீட்டு ஆணை யாளர் எனப்பட்டார். பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், திருமணம், மணவிலக்கு, பராமரிப்பு, கொடுக்கல் வாங்கலின் செல்லுபடி முதலியவற்றைத் தீர்மானிப்பதற்கும் பொறுப் பாக நியமிக்கப்பட்டவர் ஹாகிம் அல்லது நீதிபதி என அழைக்கப் பட்டார்.''*[12]

## நீதித்துறை ஒழுங்கமைப்பும் அதன் மூலாதாரங்களும்

ஷரீ'ஆ குறிப்பிட்டவொரு நீதியியல் சட்டகத்தை வரையறுக்க வில்லை யென்பது மேலே விவரிக்கப்பட்ட வரலாற்றுரீதியான

11. இப்றாஹீம், *தாரீக் அல் இஸ்லாம் அல் ஸியாஸீ*, பாகம் 4, 377-86; அவாத் முஹம்மத் அவாத், *அல் மஜல்லாஹ் அல் அரபிய்யாஹ் லி அல் திஃபா அல் இஜ்திமாயீ*, இல.10 (அக்டோபர் 1979): 98

12. இப்ன் அல் கய்யிம், *அல் துருக்*, 215-6

மதிப்பாய்வு மூலம் தெளிவாகின்றது. பதிலாக, அது சட்டவாக்கத்திற் குரிய கோட்பாடுகளையும் பொது அடிப்படைகளையும் நோக்கங் களையும் மூலா தாரங்களையும் நிறுவியிருந்தது. நிர்வாக ஒழுங்கமைப்பு சம்பந்தமான விவரங்கள் (அதாவது நீதிபதியின் நியாயாதிக்கப் பரப்பின் அளவு[13], காலத்தையும் இடத்தையும் பொறுத்து அவரது அதிகாரத்தின் வரையறைகள், அவருடன் இணைந்து பணியாற்று வதற்கு இன்னொரு நீதிபதியை நியமித்தல் (அல்லது நியமியாதுவிடல்) போன்றவை மக்களின் சம்பிரதாயங்கள், தேவைகள், சூழ்நிலைகள் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தன. நீதியியல் நடைமுறையை தனிநபரிடமோ அல்லது ஒரு நிறுவனத் திடமோ பொறுப்புசாட்டுதல் தொடர்பாக ஷரீ'ஆ எதனையும் குறிப்பிடவில்லை. அதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு முஸ்லிம் தலை மைத்துவத்திடம் விடப்பட்டது. அப்பொறுப்பு பல அதிகாரிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படலாம் அல்லது தனியொருவரிடம் இருக் கலாம். எனினும் இப்பொறுப்பு ஒப்படைக்கப்படுவோர் ஷரீ'ஆவின் நிபந்தனைகளை நிறைவு செய்வதை ஆட்சியாளர் உறுதிப்படுத்துவது முக்கியமாக இருந்தது.[14]

குற்றவியல் வழக்குகளைத் தீர்க்கும் பொறுப்பு ஆட்சியாளர் (கலீஃபா), மேன் முறையீட்டு அதிகாரி (வலீ அல் ம'ஆலிம்), இராணுவ அதிகாரி (அமீர்), காவல்துறை ஆணையாளர் (ஷாஹிப் அல் ஷுர்த்தா), நீதிபதி (காதி), சந்தைக் கட்டுப்பாட்டாளர் (ஹிஸ்பாஹ்) ஆகியோரி டையே பகிர்ந்து கொள்ளப்பட்டது என்பது இப்னு அல் கய்யிமின் மட்டுப்படுத்தப்பட்ட விளக்கத்திலிருந்து தெளிவாகிறது.[15] உண்மையில் ஒவ்வொருவரது பொறுப்புகளும் எப்பொழுதும் பிரத்தியேகமானவை யாகவோ, திட்டமாக வரையறுக்கப்பட்டனவாகவோ இருக்கவில்லை.

---

13. ஆல் மாவர்தீ, *அல் அஹ்காம் அல் ஸுல்தானீயாஹ்*, 69-73; இப்றாஹீம், *தாரீக் அல் இஸ்லாம் அல் ஸியாஸீ*, பாகம் 4, 377-86

14. அவையாவன: இஸ்லாமிய நம்பிக்கை, முதிர்ச்சி, அறிவுபூர்வ விசாரணை, சுதந்திரம், நம்பிக்கைக்குரியவராய் இருத்தல் புலன்களனைத்தும் பெற் றிருத்தல், ஷரீ'ஆ மூலாதாரங்கள் பற்றிய அறிவு.

15. இப்ன் அல் கய்யிம், *அல் துருக்*, 215

ஏனெனில், அவை செயற்பரப்பில் வித்தியாசப்பட்டதோடு அவை ஒன்றன்மீதொன்று படிந்தும் இருந்தன. எனவே, சில வேளைகளில் ஒருவருக்குரிய குறிப்பிட்ட சில பொறுப்புகள் ஆட்சியாளரின் விருப்பத்தின்படியோ அல்லது அவரது கொள்கை காரணமாகவோ இன்னொருவரிடம் ஒப்படைக்கப்பட்டன.[16]

வழக்கமாக ஹூதூத் அல்லது கிஸாஸ் போன்ற பாரதூரமான குற்றச்செயல்களை விசாரிப்பதற்கு ஆளுநரோ அல்லது காவல்துறை ஆணையாளரோ பொறுப்பாக இருந்தார். அதேபோன்று, பொது நலன்களுக்கு எதிராகப் புரியப்படும் குற்றச்செயல்களை அல்லது சிறு குற்றங்களைத் தடுக்கும் நோக்கிலான (தஃஸீர்) தண்டனைகளை வழங்கும் பொறுப்பு சந்தை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வதிகாரி 'சந்தைக் கட்டுப்பாட்டாளர்' எனவும் அழைக்கப்பட்டார். ஏனெனில், இத்தகைய வழக்குகளில் பெரும்பாலானவை சந்தை கூடும் இடத்தில் நிகழ்ந்த குற்றச் செயல்கள் பற்றியனவாக இருந்தன.

உரிமைகளை நிலைநாட்டுதல், உரிமைக்குரியோர் அவ்வுரிமைகளை அனுபவிப்பதனை உறுதிப்படுத்துதல், குடியியல்சார் வழக்குகளைத் தீர்த்துவைத்தல் என்பன ஹாகிம் எனச் சில போது அழைக்கப்பட்ட நீதிபதியின் பொறுப்பில் இருந்தது.[17]

குற்றவியல் வழக்குகளில் பயன்படுத்தப்பட்ட செயன்முறைமைகளை ஆய்ந்த அறிஞர்கள் அவற்றை முப்பிரிவுகளாகப் பிரித்தனர்:

*1.* **குற்றச்சாட்டு முறைமை.**

குற்றவியல் வழக்கென்பது சமத்துவமான இருதரப்பினர் சம்பந்தப்பட்ட பிணக்கு என்ற அடிப்படையில் விசாரிக்கப்படும். இவ்வகை வழக்குகள், அவை பற்றி முன்விசாரணையெதுவும் மேற்கொண்டிராத நீதிபதியிடம் நேரடியாகக் கொண்டுவரப்படும். அப்போது, இருதரப்பு சாட்சியங்களையும் சீர்தூக்கிப்பார்த்து எத்தரப்பின் வாதம் வலிமையானதென அறிந்து தான் கண்டறிந்தவற்றுக் கேற்ப அவர் தீர்ப்பு வழங்குவார்.

---

16. இப்ன் கல்தூன், *அல் முகத்திமாஹ்*, 740

17. அதே நூல்; இப்னு கய்யிம், *அல் துருக்*, 218-9.

*2.* ***விசாரணை முறைமை.***

*உண்மையான வழக்கு ஆரம்பமாவதற்கு முன்பே குற்றச்சாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படும். இது தற்கால முறைமையை ஒத்தது. அரச சாதனம் (அதாவது மாவட்ட வழக்குத் தொடுனரின் அனுசரனையுடன் காவல்துறை) இதனைப் பொறுப்பேற்கும். அதிகாரிகள் தம் பொறுப்புகளை நிறைவேற்றுதற்குப் போதிய அதிகாரத்தைப் பெற்றிருப்பர். குற்றஞ் சுமத்தப்பட்டவரின் எதிர்வாதம் குற்றச்சாட்டுகளுக்கு எதிரான சாட்சிகளைத் திரட்டுவதில் அடங்கியிருக்கும்.*

*3.* ***மேற் குறிப்பிட்ட இரு முறைகளும் இணைந்த முறைமை***

*இம்முறைமையில் (வழக்குக்கு முந்திய) முதல் கட்டத்தில் விசாரணையும் இறுதியான நீதிமன்றக் கட்டத்தில் குற்றம் சாட்டுதலும் இடம்பெறும்.*

*நவீன சட்ட செயன்முறை அமைப்புகள், பெருமளவிலோ அல்லது குறைந்த அளவிலோ இம்முறைமைகளின் இணைப்பாகக் காணப்படுகின்றன. இவற்றின் சிலகட்டங்களில் ஒன்றின் அம்சம் மேலோங்கியும் ஏனைய கட்டங்களில் இன்னொன்றின் அம்சங்கள் மேலோங்கியும் காணப்படும்.[18]*

*ஷரீ’ஆ திட்டவட்டமான செயன் முறைமையொன்றை வழங்கவில்லை என்பதையும் அத்தகைய விவரங்கள் இஜ்திஹாதுக்கும் நீதி நிலைநிறுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பாளர்களின் புரிந்துணர்வுக்கும் விட்டுவைக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் முன்னர் குறிப்பிட்டோம். இந்த முறைமைகளில் ஒன்றோ அல்லது இவை ஒன்றிணைந்த ஒரு முறைமையோ வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு இஸ்லாமிய அரசுகளால் கடைப்பிடிக்கப்பட்டதனை வரலாறு காட்டுகின்றது. சட்ட முறைமையொன்றை ஷரீ’ஆ திட்டவட்டமாக அறிவிக்காவிடினும் பொதுவான கோட்பாடுகளை அது முன்வைத்திருக்கிறது. இவற்றுள், சட்டம் ஷரீ’ஆவுக்கு ஏற்ப அமுலாக்*

---

18. இப்ன் கல்தூன், *அல் முகத்திமாஹ்*, 740-3; அவாத், *அல் மஜல்லாஹ் அல் அரபிய்யாஹ்*, 101-3

*கப்படல் வேண்டுமென்பதும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் வெளிப்படையானவை.*[19]

## குற்றஞ்சுமத்தப்பட்டவர்

### விசாரணைக் கட்டத்தில் குற்றஞ் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்

*முத்தஹம் (குற்றஞ்சுமத்தப்பட்டவர்) என்ற சொல் த...ஹ..ம... என்ற வேரிலிருந்து வந்தது. இதன் அர்த்தம் களங்கமுறல் அல்லது பழு தடைதல் என்பதாகும். இது கெட்டுப்போன பால் அல்லது மாமிசம் என்பன தொடர்பான அர்த்தத்தில் பிரயோகிக்கப்படுவது. காற்று அசைவற்று வெப்பம் உச்சமடைந்துள்ளது என்ற அர்த்தத்தில் 'வெப்பம் அழுகிப்போயுள்ளது' என அரபிகள் சொல்வது வழக்கம். தற்போதைய சவூதி அரேபியாவில் உள்ள திஹாமா என அழைக் கப்படும் பகுதி இந்த இரண்டாவது அர்த்தத்திலிருந்தே அப்பெயரைப் பெற்றதெனலாம்.*

*துஹ்மா அல்லது துஹாமா என்ற சொல் சந்தேகம் அல்லது நிச்சயமின்மை எனப் பொருள்படும். 'த' என்ற முதலெழுத்து 'வாவ்' என்ற எழுத்துக்குப் பதிலீடாகும். ஏனெனில் இவ்வார்த்தையின் வேர் வ..ஹ...ம... என்பதாகும். இது சந்தேகத்தை அல்லது தப்பெண்ணத்தைக் குறிக்கும். ஒருவர் தன்னை அல்லது தனது செயல்களை மக்கள் சந்தேகிக்கக்கூடிய வகையில் ஆக்கிக்கொண்டால் 'மனிதர் சந்தேகத்தை எழுப்பிவிட்டார்' எனச் சொல்வது அரபிகளின் வழக்கம்.*[20]

*சட்டத் துறைக் கலைச்சொல் பிரயோகத்தில், இப்பதம் பல ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். உதாரணமாக அபூ ஹுரைராவை ஆதாரமாகக்கொண்டு இப்ன் அபூ ஷைபாஹ் தனது முஸன்னஃப் என்ற தொகுப்பில் பின்வருமாறு அறிவிக்கின்றார்: "குறிப்பிட்டவொரு தகராறில் சம்பந்தப்பட்ட ஒருதரப்பினரின் சாட்சியம் அனுமதிக்கப்பட முடியாததென, அவர் சந்தேகத்துக் குரியவர்போல் சந்தையில் போய் சத்தமிட்டு அறிவிக்குமாறு நபி (ஸல்)*

---

*19. இப்ன் கல்தூன், அல் முகத்திமாஹ்*

*20. பார்க்க: அல் மிஸ்பாஹ், 107,129; அல் ஸாஹிதீ, தாஜ் அல் அரூஸ்*

ஒருவரை அனுப்பிவைத்தார்கள். சந்தேகத்துக்குரியவர் என்பதனால் கருதப்படுவது என்னவென ஒருவர் நபிகளாரிடம் கேட்டபோது "இது மார்க்க விடயத்தில் உமது ஐயத்துக்குரிய ஒருவரைக் குறிக்கும்" என நபிகளார் (ஸல்) அதற்குப் பதிலளித்தார்கள்."[21] "எவர்மீது உங்களுக்கு நல்லபிப்பிராயம் இல்லையோ அவரது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என இப்றாஹீம் சொல்வதுண்டு.[22]

எனினும் சட்ட அறிஞர்கள் (புகஹா) 'குற்றஞ் சுமத்தப்பட்ட வர்'(the accused) என்பதற்குப் பதிலாக 'எதிராக உரிமை கோரப் படுபவர்' (the claimed against) என்ற பிரயோகத்தைப் பயன்படுத்தினர். வேறு வகையில் சொல்வதாயின் அவர்கள் 'உரிமை கோரல்' என்பதன் வேரைப் பயன்படுத்தினர். ஏனெனில், இது ஒரு பொருளின்மீது ஒருவருக்கு இன்னொருவரைவிட அதிக உரிமையுண்டு என்பதை நிறுவும் முயற்சியாகும்.[23] உரிமைகோரலைக் குறிக்கும் 'தஃவா' எனும் சொல் எச்சவினையாக உபயோகிக்கப்படுவது. இவ்வாறு, ஸைத் என் பவர் பண விவகாரத்தில் அம்ர் என்பவர் மீது உரிமை கோரினால் ஸைத் 'உரிமை கோருபவர்' ஆகின்றார். அம்ர் 'உரிமை கோரப்படு பவர்'ஆகின்றார். இங்கு உரிமை கோரப்படும் பொருளாகப் பணம் இருக்கின்றது. உரிமை கோரலும் குற்றஞ் சுமத்தலும் அகராதி அர்த் தத்தில் வெவ்வேறானவை. உரிமைகோரல் என்பது ஓர் அறிவித்தல் விடுப்பது மாத்திரமே.

சட்ட அறிஞர்கள் அதனைப் பின்வருமாறு புரிந்துகொள்கின்றனர்: அ) இமாம் அபூ ஹனீஃபாவைப் பின்பற்றுவோரின் கருத்துப்படி உரிமை கோரல் என்பது ஒருவர் நீதிமன்றத்தில் சமூகமளித்திருக்கும் மற்றொருவர் மீது ஒரு பொருள் தொடர்பாக தனக்குள்ள உரிமையை அறிவிப்பதாகும்.[24]

---

21. இப்ன் அபீ ஷைபாஹ், அல் முஸன்னஃப், பாகம் 8, 320; அல் பைஹக்கீ, அல் ஸுனன் அல் குப்ரா, பாகம் 10, 201, அல் திர்மிதீ, அல் ஸுனன், ஹதீஸ் இல .2299; அல் கஸ்ஸாஃப், அதப் அல் காதீ, பாகம் 2, 112, பாகம் 1, 229

22. இப்ன் அபீ ஷைபாஹ், அல் முஸன்னஃப், பாகம் 8, 321

23. பார்க்க: அஹ்மத் அப்த் அல் ரஸ்ஸாக் அல் குபைஸீ, அல் ஹுதூத் வ அல் அஹ்காம், 228; அபூ அல் வலீத் இப்ன் ஷஹ்னா அல் ஹனஃபீ, லிஸான் அல் ஹுக்காம், 226, அலா அல் தீன் அல் தரபுல்ஸீ, முயீன் அல் ஹுக்காம், 54

24. அல் குபைஸீ, அல் ஹுதூத், 288

*ஆ) இமாம் மாலிக்கைப் பின்பற்றுவோரின் கருத்துப்படி 'உண்மை யானதென ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் அதனைச் சொல்ப வருக்கு உரிமை வழங்கக்கூடிய ஒரு கூற்றாகும்.'*[25]
*இ) இமாம் ஷாஃபியீயைப் பின்பற்றுவோரின் கருத்துப்படி அது 'ஒரு பொருள் தொடர்பாக ஒருவர் இன்னொருவர் மீதுள்ள தனது உரிமையை ஒரு நீதிபதியின் முன்னிலையில் அறிவிப்பதாகும்.'*[26]
*ஈ) இமாம் ஹன்பலியின் சிந்தனைப் பிரிவைச் சேர்ந்த சேர்ந்த அறி ஞர்கள், 'ஒருவர் இன்னொருவரின் கைவசமுள்ள அல்லது அவரது பாதுகாப்பிலுள்ள ஒரு பொருளுக்கு தான் உரித்தாளியெனக் காரணம் காட்டுதல்' என அதனை வரையறுக்கின்றனர்.*[27]

*'உரிமை கோருபவர்' 'உரிமை கோரப்படுபவர்' என்ற சொற்பிர யோகங்களின் பொருள் விளக்கம் குறித்து சட்ட அறிஞர்களிடையே இணக்கம் காணப்படவில்லை. உரிமை கோருபவர் தன் உரிமை கோரலை கைவிட்டுவிடின் அவரும் அவர்பாட்டில் விட்டுவிடப்படு வார். ஆனால் உரிமைகோரப்படுபவர் (எதிர் உரிமை கோருபவர்) தனது உரிமை கோரலைக் கைவிட்டுவிடினும் அவர் அவர்பாட்டில் விட்டு விடப்பட மாட்டார் என்று சிலர் இவர்களை வரையறுக்கின்றனர். ஆயினும் ஏனையோர் 'உரிமை கோருபவர்' என்பவர் ஒன்று அது இருப்பது போன்றதல்லவென வாதிடுவதோடு வெளிப்படையாகத் தெரிவதை அது அவ்வாறானதல்ல வெனக் கூறி புறந்தள்ள முனைபவர் என்றும், உரிமை கோரலுக்கு ஆளானவரோ வெளிப்படையாகத் தெரியும் ஒன்று அது அவ்வாறுதான் உள்ளதென நிறுவுபவர் என்றும் வரையறுக்கின்றனர். இன்னுஞ்சிலர் உரிமை கோருபவரை சட்டபூர் வமான வழக்கொன்றில் ஈடுபடத் தேவையற்றவர் என்றும் எதிர்உரிமை பாராட்டுபவரே அவ்வாறு செய்யவேண்டியவர் என்றும் அதனை வரையறுக்கின்றனர்.*[28]

*உரிமை கோருதல் என்பதிலிருந்து உருவான சொற்கள் கடன், பலவந்தமாகப் பறித்துகொள்ளல், விற்பனை, வாடகை, துணை ஈடு,*

---

*25. அல் ஜுர்ஜானி, கிதாப் அல் தஃரிபாத், 93; அல் முத்தரிஸீ, முஅர்ரப் மின்அல் முகர்ரிப், 164*

*26. அல் குபைஸீ, அல் ஹுதூத், 287*

*27. ஷர்ஹ் ஹுதூத் இப்ன் அரஃபாஹ், 468*

*28. ஹாஷியத் கைலூபி வ உமைராஹ்,* பாகம் 4, 334

*மத்தியஸ்தம், சாசனம் மூலம் எழுதிவைத்தல், செல்வம், திருமணம், மணவிலக்கு, கணவனை விட்டுப்பிரிய மனைவியை அனுமதித்தல் (குலா), அடிமை விடுதலை, வம்சாவளி, முகவர் தொழிற்பாடு போன்றவை சம்பந்தப்பட்ட குற்றங்களோடு தொடர்புடைய நிதியுரிமைகள் மற்றும் தனியார் சட்டம் குறித்த வழக்குகளில் சட்ட அறிஞர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய வழக்குகளே பொதுவாக ஒரு நீதிபதியின் தீர்ப்பை வேண்டியனவாக இருக்கின்றன.*

*எனினும் குற்றவியல் வழக்குகளில் 'குற்றஞ்சுமத்தப்பட்டவர்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கு யாதொரு தடையுமில்லை. மறுதலையாக, அது அகராதிவழி பெறப்பட்ட முறை, அதன் சட்ட முக்கியத்துவம் என்பன பற்றி நாம் மேலே கலந்துரையாடிய கருத்தின்படி இச்சொல்லின் பயன்பாடு அதிகம் பொருத்தமானதாத் தோன்றுகிறது.*

## குற்றவியல் வழக்குகளில் குற்றஞ்சுமத்தப்பட்டவர்களின் வகைகள்:

*குற்றவியல் வழக்குகளில் குற்றஞ்சுமத்தப்பட்டோரை சட்ட அறிஞர்கள் மூவகையினராகப் பிரிப்பர். அ) ஒருவர் பக்திமானாகவும் நேர்மையாளராகவும் அறியப்பட்டவராகையால் அவர்மீது சுமத்தப்படும் குற்றத்தை அவர் செய்திருக்கமாட்டார் எனக் கருதப்படக் கூடியவர் ஆ) ஒருவர் தீமைபுரிபவராக, தீயொழுக்கமுடையராக நன்கறியப்பட்டவராகையால் அவர்மீது சுமத்தப்படும் குற்றத்தைஅவர் செய்திருக்கமாட்டார் எனக் கருதப்பட முடியாதவர். இ) ஒருவரின் சூழலைப்பற்றி எதுவும் தெரியாத நிலையில் அவர்மீது சுமத்தப்படும் குற்றத்தை அவர் புரிந்திருப்பாரா என்பதை அனுமானிக்கப்பட முடியாதவர்.*

*முதல் பிரிவினரைப் பொறுத்தமட்டில் உறுதியான சட்டபூர்வமான சான்றுகள் இல்லாதவிடத்து அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. குற்றச்சாட்டைமட்டும் அடிப்படையாக வைத்து இத்தகையோருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்க முடியாது. இதன் மூலம் கண்ணியமானவர்களை அவர்களுக்குக் களங்கம் கற்பிக்க முற்படுவோரிடமிருந்து பாதுகாக்க முடியும். இத்தகைய மனிதர்களுக்கெதிராக போலியான உரிமை கோரல்களை அல்லது குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களுக்கான தண்டனைபற்றி*

இருவகை அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. அ) சம்பந்தப்பட்டவர் தண்டிக்கப்பட வேண்டுமென்பதே பெரும்பான்மையான சட்ட அறிஞர்களின் அபிப்பிராயம். ஆ) குற்றம் சுமத்துபவர் குற்றஞ் சாட்டப் பட்டவருக்கு தீங்கிழைப்பதையோ அவமானம் உண்டுபண்ணு வதையோ நோக்கமாகக் கொண்டிருந்தார் என நிரூபிக்கப்பட்டா லேயொழிய அவர் தண்டிக்கப்படக் கூடாது என்பது இமாம் மாலிக் மற்றும் அவரது தோழர்களின் கருத்தாகும். பெரும்பான்மையினரது தீர்ப்பின் சட்ட அடிப்படையானது ஒருவர் சூழ்நிலை அனுமானத்தின் படி குற்றமற்றவர் எனக் கருதப்படலாகும்.

இரண்டாவது பிரிவைப் பொறுத்தவரை சூழ்நிலையால் அனு மானிக்கப்படும் சான்றுகளைக் கருத்தில் கொண்டு மிகவும் விவேக மான முறையின்படி செயற்படுவதும் கோட்பாட்டைப் பின்பற்றுவது மாகும். இதனடிப்படையில் குற்றஞ்சுமத்தப்பட்டவரின் தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்படலாம். அதன் பின்னர் குற்றச்சாட்டை உறுதிப் படுத்துவதா அல்லது நிராகரிப்பதா எனத் தீர்மானிப்பதற்கு, குறித்த குற்றச் செயல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றத்தை மறுப்பதோ அல்லது அவரது சத்தியப்பிரமாணமோ போதிய அத்தாட்சிகளாக அமைய முடியாது. குற்றச்சாட்டு உண்மையென நிரூபிக்கப்படுவது அல்லது நிராகரிக்கப்படுவது அவசியம். இவ்வகை வழக்குகளின் விசாரணைக் காலத்தின்போது குற்றஞ்சுமத்தப்பட்டவரைத் தடுத்துவைப்பதற்கு நீதிமன்றதுக்கு (அதாவது ஆட்சியாளர் அல்லது நீதிபதிக்கு) உரிமை உண்டு.

மூன்றாவது பிரிவினவினரைப் பொறுத்தமட்டில் குற்றஞ்சாட்டப் பட்டவரின் சந்தர்ப்ப சூழ்நிலை குறித்து எதுவும் தெரியவராத நிலையில், அது அறியப்படும் வரை அவரை ஆட்சியாளரோ நீதிபதி யோ தடுத்து வைக்கலாம். மாலிக், ஹன்பல், அபூ ஹனீஃபா மற்றும் அவர்களின் தோழர்கள் மாணவர்கள் முதலிய பெரும்பான்மை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இம்முடிவு ஒரு ஹதீஸை அடிப் படையாகக் கொண்டது. இந்த ஹதீஸின்படி நபிகள் (ஸல்) அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை ஒரு பகல் ஓர் இரவு முழுவதும் தடுத்து வைத்தார்கள்.[29] தடுத்துவைத்தல் என்பது சுதந்திரத்தைத் தடைசெய்தல்

29. இப்ன் அல் கய்யிம், அல்துருக், 101, 103

*அல்லது மட்டுப்படுத்தல் என மரபுவழி சட்ட நிபுணர்கள் அர்த்தம் கொள்கின்றனர். இது சிறைப்படுத்தலாக அல்லது கண்காணிப்பின் கீழ் வைப்பதாக அல்லது வரையறுக்கப்பட்ட இடமொன்றில் ஒருவரைத் தங்கியிருக்கச் செய்வதாக இருக்கலாம். தடுத்துவைப்பதற்கு அனுமதிக் கப்பட்ட காலவரையறையும் சர்ச்சைக்குரியதே. இதுபற்றி இரண்டு அடிப்படை அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. சிலர் இதனை ஒருமாத காலம் என வரையறுக்கின்றனர்.அதேவேளை மற்றவர்கள் இது சம்பந்தப்பட்ட அதிகாரியின் முடிவுக்கு விடப்படல்வேண்டும் என் கின்றனர்.*[30]

## கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள்

*சந்தர்ப்ப சூழ்நிலையால் ஒருவர் நிரபராதியெனச் சுட்டிக் காட்டப் படுவது குறித்து ஷரீ'ஆ அக்கறை காட்டுகின்றது. சட்டநிபுணர்கள் தமது அநேக தீர்ப்புகளை இதன் அடிப்படையில் கொண்டுள்ளனர். மேலும், மறுக்கமுடியாத அல்லது சந்தேகத்துக்கு இடமளியாத சான்றுகள் மூலம் மாத்திரமே இதனைப் புறந்தள்ள முடியும். இவ்வாறு, நிச்சயமான ஒன்று சந்தேகத்தினால் அழிக்கப்பட முடியாது என்ற அடிப்படையுடன் இது நெருக்கமான தொடர்புடையது. உண்மையில் ஓர் அடிப்படையுடன் இன்னொன்றுக்குள்ள தொடர்பு தண்டுடன் கிளை கொண்டுள்ள தொடர்புக்கு ஒப்பாகும். ஏனெனில், நீதியியல் துறை முழுவதும இவையிரண்டும் ஒன்றாக இணைந்தே காணப்படு கின்றன. நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் எனக் கருதப்படும் அபாயங்களிலிருந்து, தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சமூகம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டுனும் அவை ஒத்துப்போக வேண்டும். சமூகத்துக்கு அவசிய மானதெனக் கருதப்படுபவை பாதுகாக்கப்படுவது சம்பந்தமாகவும் இது பொருந்தும்.*

*சூழ்நிலை அனுமானத்தின்படி ஒன்று குற்றமற்றது எனக் கருதும் கோட்பாட்டைக் கைவிட்டால், அதனிடத்தை, சமூகத்துக்குத் தீங்கு செய்யக்கூடிய இன்னொன்று கைப்பற்றிக் கொள்ளுமா? இதற்கான விடையின் ஒரு பகுதியை முன்னர் குறிப்பிடப்பட்ட குற்றஞ் சுமத்தப் பட்டோரின் முப்பிரிவு வகைப்படுத்தலில் காணமுடியும். விடையின் எஞ்சிய பகுதியை விவேகம் மிக்க முறையில் செயற்படுதல், தவறு*

*30. அல் மாவர்தி, அல் அஹ்காம் அல் ஸுல்தானீயாஹ்*

*செய்வதற்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்தல், தீங்குவிளைவிப் பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் முதலியவற்றைத் தெரிவுசெய்யும் கோட்பாட்டில் சிலவேளை கண்டுகொள்ள முடியுமாக இருக்கலாம்.*

*தனிமனிதனின் உரிமைகளைப் பாதுகாக்க முற்படும் இஸ்லாம் முழு சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முனைகின்றது. எனவே தனிமனித உரிமை, சுதந்திரம் என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு ஒருவர் சமூகத்தின் உரிமைகளை மீறவோ, ஏதோ அபாயம் நிகழப் போகின்றது என்று சாக்குப் போக்குக் கூறி தனிமனிதனின் உரிமை களைச் சமூகம் நசுக்கவோ பறிக்கவோ முடியாது. இஸ்லாம் மனிதத் தன்மையை மதித்து மேன்மைப்படுத்துவதுடன் மனிதப்பிறவிகளுக்கு அனைத்துக்கும் மேலாக உயிர் வாழுதல், உடல் நலம் பேணுதல், கௌரவமும் மதிப்பும் பேணுதல், தனிமனித சுதந்திரம், சுயமாக நடமாடுவதற்கான சுதந்திரம் போன்ற இன்னோரன்ன உரிமைகளை அது வழங்கியிருக்கின்றது. இந்த வகையில் தனிமனிதனின் வீடும், சொந்த வாழ்வும் புனிதமானவை. ஒருவர் இன்னொருவரின் வீட்டினுள் அனுமதியின்றி நுழைவதற்கோ, அதனுள் எட்டிப் பார்ப்பதற்கோ, தனிப்பட்ட உரையாடல்களை ஒற்றுக்கேட்பதற்கோ இன்னொருவரின் தபாலை உடைத்துப் பார்ப்பதற்கோஅல்லது ஒருவருடைய மேற் சொன்ன உரிமைகளை மீறுவதுபோன்ற எதனையும செய்வதற்கோ எவருக்கும் உரிமையில்லை.*

*சமூகமும், அதுவொரு சமூகம் என்ற வகையில் அதேபோன்ற உரிமைகளை அனுபவிக்கின்றது. சமூகத்தின் அமைதியும் பாதுகாப்பும் பேணப்படுவதும் அதன் நலன்கள் நிலைநாட்டப்படுவதும் குற்றச் செயல்கள் ஒழிக்கப்படுவதும் அவசியமாகின்றன. இச்சமூக நலன்கள் பேணப்படுவதற்காக தனிமனிதனின் உரிமைகளுக்குத் தற்காலிகமாக கட்டுப்பாடுகள் விதிப்பதும் அவை இடைநிறுத்தப்படுவதும் அவசிய மாகுமாயின் அத்தகைய நடவடிக்கைகள் தேவைக்கேற்ப நிர்ணயிக் கப்படும். தேவையின் அளவுக்கேற்பவே இது தீர்மானிக்கப்படும். தேவை காரணமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் அதிகாரிகளால் விசா ரணையாளருக்கு குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் மீது வழங்கப்படும் அதிகாரத்தின் எல்லையைப் பிரதிபலிக்கும். எனவே, விசாரணையாள ருக்குள்ள அதிகாரம் சட்டபூர்வமாய் நிறுவப்பட்ட கோட்பாட்டை*

*விட்டு விலகிச் செல்கிறது எனினும் அவ்வாறு செய்வதன் நோக்கம் சட்டப்படி நிறுவப்பட்ட இன்னொரு கோட்பாட்டை நிலைநிறுத்து வதற்கு வேறு வழியில்லாத நிலையில் அதனைச் சாதித்துக் கொள்வதற் கேயாகும்.*

*ஷரீ'ஆ, குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளவரின் உரிமைகள் மீது சில கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு விசாரணையாளரையோ நீதிபதியை யோ அனுமதிக்கின்றதெனில், அதேபோல் குற்றஞ்சாட்டப்பட்ட வருக்குச் சில உத்தரவாதங்களை வழங்கும் வகையில் விசாரணை யாளரின் அதிகாரத்தின்மீதும் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.*

### விசாரணையாளரின் அதிகாரம்

*சந்தேகத்துக்குரிய நிலையில் உள்ள ஒருவர் மீது விசாரணையாள ருக்குள்ள அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதாகும். அது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளவரின் சில உரிமைகள்மீது தலையிட்டாலும், நிச்சய மாக அவரது ஏனைய அடிப்படை உரிமைகளில் தலையிட மாட்டாது. இதனால் தான் அத்தகையவரை நபி (ஸல்) அவர்கள் 'கைதி' என்றார்கள்.[31] குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளவர் அரசின் செலவிலேயே பராமரிக்கப்படுவார் என்பதையும் இது நிறுவுகின்றது.*

*தடுத்துவைத்தல் என்பது 'தனிநபர் ஒருவரை ஏதேனுமொரு வகையில் பிறருக்குத் தீங்கு நிகழ வழியேற்படாத விதத்தில் பிறருடன் தொடர்பு கொள்ளாமல் தடுத்தல்' என இப்ன் கய்யிம் கருதுகின்றார்.[32] பிற சட்டநிபுணர்கள் தடுத்துவைத்தலை 'ஹுதுத்' போன்ற தண்டனை வகையைச் சேர்ந்ததாகக் கருதுகின்றனர். எனவே அது சந்தேகத்தின் பேரில் மட்டும் பரிந்துரைக்கப்படல் கூடாது என்கின்றனர். உண்மை யில் தனிமனிதனின் சுதந்திரமும் அவனது நடமாட்டத்துக்கான உரிமையும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன என்பதே இங்கு ஏனைய வற்றை விஞ்சி நிற்கும் அடிப்படைக் கோட்பாடாகும். "அவனே பூமியை (வாழ்வதற்கு) எளிதானதாக ஆக்கிவைத்தான். எனவே அதன் பல பாகங்களில் சென்று (உங்களுக்கு அளித்திருக்கும்) உணவிலிருந்து*

---

*31. இப்ன் அல் கய்யிம், அல் துருக்*

*32. அதே நூல்*

*உண்ணுங்கள்."(67:15).* எனவே, சட்டபூர்வமாகச் செல்லுபடியாகக் கூடிய காரணமின்றி ஒருவர் தடுத்துவைக்கப்படவோ, அவரது நடமாடும் உரிமை பறிக்கப்படவோ கூடாது. [33]

சிறையிலிடப்பட்டவர் மீதும் அவரது விவகாரங்கள்மீதும் இஸ்லாம் மிகுந்த கரிசனை காட்டியிருக்கின்றது. நபி(ஸல்) அவர்கள் ஒருதடவை ஒரு கைதியை ஒருவரின் பொறுப்பில் ஒப்படைத்து அவரை நன்கு பார்த்துக்கொள்ளுமாறும் மரியாதையுடன் நடத்துமாறும் பணித் தார்கள். பின்னர் அவரை அடிக்கடி போய்ப்பார்த்து அவரது நலன் பற்றி விசாரித்தார்கள். அலீ இப்ன் அபூ தாலிப் (றழி) அவர்கள் அடிக்கடி சிறைச்சாலையின் நிலைமையைப் பரிசீலிப்பதற்கும் கைதி களின் முறைப்பாடுகளுக்கு செவிமடுப்பதற்குமென அங்கு திடீர் விஜயங்களை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது.[34]

எல்லாக் கைதிகளுக்கும் போதியளவு உணவு, உடைகள், மருத்துவ வசதிகள் முதலியன வழங்குவதும் அவர்களின் உரிமைகளைப் பாது காப்பதும் அரசின் பொறுப்பாகும். மேலும் ஒரு நீதிபதி பதவிப் பொறுப்பேற்றதும், அவரின் முதற்கடமை சிறைச்சாலைக்குச் சென்று அநீதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் உடனடியாக விடுதலைசெய்வதாகும் என்று ஷரீ'ஆ அறிஞர்கள் தீர்ப்புக் கூறியுள் ளனர். அவர் ஒவ்வொரு கைதியிடமும் சென்று அவர் சிறைவைக்கப் பட்டிருப்பதன் காரணத்தை விசாரித்தறிய வேண்டும். குறிப்பிட்ட சில விவகாரங்களில் குற்றஞ் சுமத்தியவர்களையும் சந்தித்து சிறைப்படுத்தி வைப்பதற்குரிய காரணங்கள் தொடர்ந்தும் செல்லுபடியாகின்றனவா என்பதையும் நீதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்துகொள் ளலாம்.

ஒருவர் சிறையிலிடப்படும்போது அவரது பெயர், வம்சாவளி, சிறையிலடைக்கப்படுவதற்கான காரணம், சிறைத்தண்டனைக்குரிய காலம், சிறைவாசம் தொடங்கும் திகதி, முடிவுறும் திகதி முதலியவற் றைப் பதிவு செய்தல் தண்டனை வழங்கும் நீதிபதியின் கடமையாகும். அதேவேளை ஒரு நீதிபதி ஓய்வுபெற்றுச் செல்லும்போது அப்பதவிக்கு

---

33. இப்ன் ஹஸ்ம், *அல் முஹல்லாஹ்,* பாகம் 11, 141

34. பார்க்க: அபூ யூஸுஃப், *கிதாப் அல் கராஜ்* மற்றும் அதன் விளக்கவுரையான *ஃபிக்ஹ் அல் முலூக்* பாகம் 2, 238

*வரும் புதியவர் முன்னைய நீதிபதிக்கு எழுதி அவரால் சிறைக் கனுப்பப்பட்டவர்களின் விவரங்கள், சிறைக்கனுப்பப்பட்டமைக்கான காரணங்கள் முதலியவற்றை அறிந்து கொள்ளவேண்டும்.*

### ஒருவருக்கு சிறைத்தண்டனை வழங்குவதற்கான அதிகாரம்.

*ஒருவருக்குச் சிறைத்தண்டனை வழங்க உரிமையுள்ளவர் யார் என்பதையிட்டு சட்டநிபுணர்கள் மத்தியில் அபிப்பிராயபேதம் உண்டு. விசாரணையாளரின் அந்தஸ்துக்கு ஏற்ப அவரது அதிகாரம் வேறுபடும் என்கிறார் அல்-மாவர்தீ. உதாரணமாக, விசாரணையாளர் அதிகாரி யாகவோ நீதிபதியாகவோ இருப்பின், திருட்டு அல்லது விபச்சாரக் குற்றம் சுமத்தப்பட்டவர் அவர் முன் கொண்டுவரப்பட்டால், அந்நபர் பற்றி மேலதிகமாக எதுவும் அறியவராமல் அவரை அவர் சிறைக் கனுப்ப முடியாது. வெறும் குற்றச்சாட்டு மட்டும் ஒருவரைச் சிறைக் கனுப்பப் போதுமானதன்று. எனினும் வழக்கை விசாரிப்பவர் ஆட்சியாளராகவோ குற்றவியல் நீதிமன்ற நீதிபதியாகவோ இருந்து, சான்றுகள் குற்றத்தைப் போதியளவு நிரூபிப்பனவாகவும் இருப்பின் சிறைக்கனுப்பவோ அல்லது தடுத்துவைக்கவோ முடியும். எனினும், குற்றச்சாட்டு ஆதாரமற்றதெனப் பின்னர் தெரிய வந்தால் குற்றஞ் சுமத்தப்பட்டவரை அவர் விடுவிக்கவேண்டும். இவ்விவரங்களைப் பொறுத்தவரையில் சட்டநிபுணர்கள் மாவர்தீயின் கருத்தை ஏற்றுக் கொண்டனர்.*

### சிறைவைக்கும் காலஎல்லை.

*ஒருவரை எவ்வளவு காலம் சிறைவைக்க முடியும் என்பதையிட்டும் அறிஞர்கள் அபிப்பிராயபேதப்பட்டனர். அது ஒருமாத காலத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது எனச் சிலர் கூறினர். அது இமாமின் அல்லது சம்பந்தப்பட்ட நீதிமன்ற அதிகாரியின் முடிவுக்கு விடப்படல் வேண்டு மென மற்றவர்கள் கருதினர். உண்மையில் பின்னைய கருத்தே அதிக நியாயமானது.*[35]

*தடுத்துவைப்பதற்கான தேவை அதிகமாகக் காணப்படும் நிலையில் அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்படுவதன் நோக்கம், ஆ) தண்டனை வழங்குபவரின் அந்தஸ்து இ) வழங்கப்படும் தண்ட னைத் தீர்ப்பு, ஈ) சிறைவாசத்தின் கால எல்லை போன்றவற்றுடன்*

---

*35. இப்ன் அல் கய்யிம், அல் துருக், 103*

*தொடர்பான நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டால், முன்னெச்சரிக்கையாகத் தடுத்து வைப்பதே அனுமதிக்கப்படும் என்பது இப்போது தெளிவாகியிருக்கும்.*[36] *இவை அனைத்தும் சம்பந்தப்பட்ட நீதிமன்ற அதிகாரி குறிப்பிட்டவொரு காலத்தினதும் இடத்தினதும் சட்டக் கோட்பாடுகளுக்கேற்ப விடயங்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான பாரிய செயற்பரப்பினைக் கொண்டனவாக உள்ளன. வேறு வகையில் சொல்வதானால், இவை மாற்றங்களுக்கும் முன்னேற்றத்துக்கும் இடமளியாத மாறாத்தன்மையுள்ள மூடுண்ட விடயங்களல்ல.*

### குற்றஞ் சுமத்தப்பட்டவரையும் அவரது வதிவிடத்தையும் உரையாடல்களையும் பரிசோதனைக்குட்படுத்தல்

*அல்லாஹ் மனிதஇனத்தைப் பாதுகாத்து கௌரவப்படுத்தியுள்ளதுடன் தனிமனிதனுக்கும் அவனது உடலுக்கும் கௌரவத்துக்கும் ஊறுவிளைவிப்பதைத் தடைசெய்துள்ளான்.*[37] *அதேபோன்று ஒரு தனியாளின் வீடு புனிதமானதெனவும் அப்புனிதத்தைப் பங்கப்படுத்தக் கூடாது எனவும் அவன் அறிவித்துள்ளான்: "விசுவாசம் கொண்டோரே! உங்கள் வீடுகள் அல்லாத வீடுகளில் நீங்கள் அனுமதி கோரி அவ்வீடுகளில் உள்ளவர்களுக்கு ஸலாம் கூறாதவரை நுழையாதீர்கள். அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும். நீங்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டு (இது உங்களுக்குக் கூறப்படுகின்றது). அவ்வில்லங்களில் நீங்கள் யாரையும் காணாவிடின் உங்களுக்கு அனுமதி கிடைக்கும்வரை அவற்றின் உள்ளே செல்லாதீர்கள். மேலும் "நீங்கள் திரும்பி விடுங்கள்" என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், நீங்கள் திரும்பிவிடுங்கள். அதுவே உங்களுக்குப் பரிசுத்தமானதாக இருக்கும்."(24: 27-28).* மேலும் *"விசுவாசம் கொண்டோரே! அதிகம் சந்தேகப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் சிலவிடயங்களில் சந்தேகம் தவறானதாகும். இன்னும் ஒருவர்மீதொருவர் உளவு பார்க்காதீர்கள்." (49:12).*

நபி (ஸல்) *அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமின் இரத்தம், செல்வம், கௌரவம் முதல் அனைத்தும் இன்னொரு முஸ்லிமுக்கும்*

36. *அவாத், அல் மஜல்லத் அல் அரபிய்யாஹ்*

37. *இது ஆதாரபூர்வமான ஹதீஸின் ஒரு பகுதி .* பார்க்க: *அல் ஸூயூதீ, அல் ஃபத்ஹ் அல் கபீர்* பாகம் *3, 256*

*புனிதமானது.'' "மற்றொருவரைப்பற்றி மனிதர்கள் சொல்பவற்றுக்கு - அவ்வாறு சொல்பவர்கள் அந்த மனிதரோடு நட்புறவாக இல்லை என்பது தெரிந்திருந்தும் - செவிசாய்ப்பவர்களின் காதுகளில் இறுதித் தீர்ப்பு நாளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றப்படும்.'' "மக்களைப்பற்றி சந்தேகத்துக்குரிய விடயங்களை ஓர் அமீர் வெளிப்படுத்த முயன்றால் அவர் அவர்களை நாசமாக்கிவிடுவார்.''*

*இவ்வாறான வேறு சம்பவங்களும் உள்ளன. இப்ன் மஸ்ஊத் ஈராக்கின் ஆளுநராக இருந்தபோதுஅவரிடம் 'வலீத் இப்ன் உக்பாவுடைய தாடியிலிருந்து மதுவடிகின்றது' என கூறப்பட்டபோது அவர் சொன்ன பதில்: "உளவறிவதிலிருந்து நாம் தடுக்கப்பட்டுள்ளோம். ஆயினும் வெளிப்படையாக ஏதேனும் எமக்குத் தெரியவரின்அதற்காக அவர்மீது நடவடிக்கையெடுப்போம்.'' அபூ மிஹ்ஜான் அல் தகபீ அவரது வீட்டில் நண்பர்களுடன் மதுவருந்துவதாக உமர் இப்ன் அல் கத்தாபிடம் அறிவிக்கப்பட்டதும் அவர் நேரே அபூ மிஹ்ஜானுடைய வீட்டுக்குச் சென்று உள்ளே பிரவேசித்தபோது, அங்கு இப்னு மிஹ்ஜானுடன் இன்னொருவர் மட்டுமே இருக்கக் கண்டார். அம்மனிதர் உமரிடம் "இதற்கு உமக்கு அனுமதியில்லை. உளவு பார்ப்பதை விட்டும் அல்லாஹ் உம்மைத் தடுத்துள்ளான்'' என்றார். உமர் மறுவார்த்தையின்றி அங்கிருந்து வெளியேறிவிட்டார்.*

*அப்துற் றஹ்மான இப்ன் அவ்ஃப் அறிவிக்கின்றார்:*

*நான் உமருடன் (மதீனா) நகரை ஊர்க்காவல் புரிவதில் ஓர் இரவைக் கழித்தேன். ஒரு வீட்டில் வீட்டுக்கதவு சாடையாகத் திறந்திருக்க ஜன்னலில் வெளிச்சம் தென்பட்டது. உரத்த குரல்களும் அசூசையான பேச்சுகளும் எம் செவிகளில் வீழ்ந்தன. "இது ரபிய்யாஹ் இப்ன் உமைய்யாஹ் இப்ன் ஹல்ஃபுடைய வீடு. இப்போது அவர்கள் குடித்துக் கும்மாள மடித்துக்கொண்டிருக்கிறார்கள். நீர் என்ன நினைக்கிறீர்?'' எனக் கேட்டார் உமர். அப்போது நான் " அல்லாஹ்வினால் தடுக்கப் பட்ட ஒரு செயலை நாம் செய்துகொண்டிருக்கிறோம். உளவு பார்க்க வேண்டாம் என அல்லாஹ் கூறியிருக்க நாம் உளவு பார்த்துக்கொண் டிருக்கிறோம்.'' என்றேன். உடனே உமர் அவர்களை அவர்கள் பாட்டில் விட்டுவிட்டு அங்கிருந்து திரும்பி விட்டார்.*

*இதிலிருந்து தனிமனிதனின் அந்தரங்கமும் ஏனைய வகையான அந்தரங்கங்களும் பாதுகாக்கப்படல் வேண்டுமென்பது தெளிவாகின்றது. வேறொருவிதமான தேவை ஏற்படாதவிடத்து இதுவே சரியானது.*

*மேலே குறிப்பிடப்பட்ட திருவசனத்தில ; 'சந்தேகம்' என்பதன் அர்த்தம் 'குற்றஞ்சாட்டடல்' என்கிறார் புகழ்பெற்ற குர்ஆன் சட்ட விளக்கவுரையாளரான குர்தூபி. ஆதாரம் எதுவுமின்றி குற்றங்கள் சுமத்தப்படுதலே இத்திருவசனத்தில் தடுக்கப்படடுள்ளது என்கிறார் அவர். எவ்வித ஆதாரமுமின்றி ஒருவர் மீது விபச்சாரம் அல்லது மது அருந்துதல் தொடர்பான குற்றங்களைச் சுமத்துதல்போன்றவை இதில் அடங்கும். அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்:*

*"இத்திருவசனத்தில் 'சந்தேகம்' என்பது குற்றச்சாட்டைக் குறிப்பதற்கு ஆதாரம், அல்லாஹ் அதனையடுத்து "ஒருவர்மீதொருவர் உளவறிய வேண்டாம்" என அறிவிப்பதாகும். இதற்குக் காரணம் ஒருவர் குற்றஞ்சாட்டத் தூண்டப்பட்டு உளவறிதல், விசாரணை செய்தல், கண்காணித்தல், ஒற்றுக்கேட்டடல் என்பன மூலம் தமது சந்தேகத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முற்படுவதாகும். இவ்வாறு உளவறிதலை நபிகளார் (ஸல்) தடைசெய்துள்ளார்கள். சந்தேகங்கள் யாவற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது எவ்வித ஆதாரமுமற்ற வீண் சந்தேகமாகும். இது 'ஹறாம்' எனத் தவிர்க்கப்படவேண்டிய ஒன்று. எனவே சந்தேகிக்கப்படும் ஒருவர் நல்லவராகவும் அவர் வெளிக்காட்டும் நேர்மைக்காக மக்களால் மதிக்கப்படுபவராகவும் இருப்பின் தகுந்த ஆதாரமின்றி அவர்மீது தவறான நடத்தை, ஊழல் போன்ற குற்றங்களைச் சுமத்துதல் ஹறாமாகும். அதேவேளை வெட்கப்படாமல் அநீதியிழைப்பதற்குப் பேர்போன ஒருவர் சம்பந்தப்பட்ட விவகாரம் வேறுவகையினதாகும். இவ்வாறு சந்தேகங்கள் இருவகைப்படும். முதல்வகை தீர்ப்புக்கு அடிப்படையாக அமையக்கூடிய வலுவான ஆதாரங்களுடன் முன்வைக்கப்படும் சந்தேகம், இரண்டாம் வகை வெளிப்படையான காரணங்கள் ஏதுமற்ற எத்தகைய தீர்ப்பும் வழங்கப்பட முடியாத சந்தேகம். இவ்வகை சந்தேகமே இத்திருவசனத்தால் தடை செய்யப்படும் சந்தேகமாகும். அதன் மீது தீர்ப்பெதுவும் வழங்கப்பட முடியாது. இவ்வகைச் சந்தேகமே இத்திரு வசனத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது.*

ஒருவரையோ அவரது வீட்டையோ சோதனையிடல், கண்காணித்தல், அவரது தொலைபேசி உரையாடலை அல்லது நேரடி உரையாடலை ஒற்றுக்கேட்டல், எந்த வகையிலும் அவரது அந்தரங்கத்தில் தலையிடல், அவர் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்திருப்பார் என்ற ஆதாரமற்ற சந்தேகத்தில் அது பற்றிய தனது தனிப்பட்ட நம்பிக்கையை வெளிப்படுத்தல் போன்றவற்றுக்கு எந்தவொரு தனியாளும் உட்படுத்தப்படல் கூடாது என்பதை இது காட்டுகிறது. ஆதாரமற்ற மிக மோசமான அத்தகைய சந்தேகத்தைக் கொண்டிருப்பவர் தவறிழைப்பவராவார் என்பதே இதற்குக் காரணம். இது உண்மைக்கு வலுசேர்க்கப் போவதில்லை. இதனைச் சுட்டிக் காட்டுவதற்கான தகவல்கள், இதனை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படை, இதனை நிரூபிப்பதற்கான சான்றுகள் என எதுவும் இல்லாதவிடத்து இதன்மீது எதனையும் கட்டியெழுப்ப முடியாது.

குர்ஆன் விரியுரையாளர்களும் குர்ஆன் சட்ட விளக்கவுரையாளர்களும் கைதுசெய்தல், முன்னெச்சரிக்யைாகத் தடுத்துவைத்தல் முதலியவற்றை அனுமதிப்பதில் சட்டஅறிஞர்களைப் பின்பற்றுவது கவனிக்கத்தக்கது. உண்மையில் அன்றாட வாழ்வில் நேர்மையானவர்களாகவும் நல்லவர்களாகவும் காணப்படுபவர்களையும், நேர்மையற்றவர்களாகவும் நம்பத்தகாதவர்களாகவும் காணப்படுபவர்களையும் அவர்கள் வேறுபடுத்திக் கண்டனர். இதனால் நேர்மையான, கண்ணியமான மனிதர்களை வேவுபார்ப்பதே தடைசெய்யப்பட வேண்டுமென அவர்கள் கருதினர். எனினும் ஏனையவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களை வேவுபார்த்தல் சட்டபூர்வமானதே எனக் கொண்டனர்.

உளவறிதல் மீது குர்ஆனும் ஸுன்னாவும் விதிக்கும் தடை பொதுவானதேயன்றி திட்டவட்டமான ஒன்றல்ல. இதற்கு முன்பு வரம்பு மீறியவராகவோ குற்றஞ்சாட்டப்பட்டவராகவோ ஒருவரைப்பற்றி ஏற்கனவே பதிவுகள் இருப்பினும், தகுந்த ஆதாரமின்றி அவரது அந்தரங்கத்தில் தலையிடுவதற்கு அது போதுமானதல்ல. அபூ மிஹ்ஜான் அல் தக்கஃபீ விடயத்திலும் ராபியாஹ் இப்ன் உமைய்யாவின் விடயத்திலும் வேவுபார்க்க உமர் (ரழி) அவர்கள் மறுத்தது இக்கண்ணோட்டத்திலேயே. அவ்விருவருமே குடிப்பழக்கம் உடையவர்களென நன்கறியப்பட்டவர்கள். வலீத் இப்ன் உக்பாவும் மது

வருந்துபவரென நன்கறியப்பட்டிருந்தும் இப்னு மஸ்ஊத் அவர்மீது வேவுபார்க்காமல் விட்டதும் இதனையே காட்டுகின்றது.

இக்கோட்பாட்டின் அடிப்படையில்தான் ஒருவர் குற்றச்செயலில் ஈடுபட்டார் என்பதை நிரூபிப்பதற்குச் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் சாட்சியம் இல்லாதவிடத்து அவரையோ அவரது வீட்டையோ சோதனையிடல், அவருடைய தனிப்பட்ட உரையாடலை ஒற்றுக்கேட்டல், கடிதத்தொடர்புகளைத் தணிக்கைசெய்தல், அவரது அந்தரங்க வாழ்க்கையில் தலையிடல் முதலியவற்றுக்கு ஷரீ'ஆ இடமளிப்பதில்லை. அத்தகைய சாட்சியம் ஷரீ'ஆ சட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான அதிகாரிகளால் பரிசீலிக்கப்படல் வேண்டும். இவ்வதிகாரிகள் நிச்சயமாக ஷரீ'ஆவின் போதனைகளையும் அதன் நோக்கங்களையும் விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாக, இவ்வுரிமைகள் குர்ஆனினாலும் ஸுன்னாவாலும் உத்தரவாதமளிக்கப்பட்டவை என்பதை உணர்ந்தவர்களாக, இவற்றில் மாற்றத்தை உண்டுபண்ண எத்தனிப்பது அல்லது அவற்றை தனியான நிலைமைகளுக்கு ஏற்ப விளக்கமளிக்க முற்படுவது என்பன குர்ஆன், சுன்னாஹ் ஆகிய இரு ஆதாரங்களும் நிறுவியுள்ளவற்றை மீறுகின்ற முயற்சியென்பதை அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும். எனவே ஒரு குற்றச்செயலின் சந்தர்ப்ப சூழலைத் தீர்மானிப்பதற்கும், குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் தப்பித்துக்கொள்வதைத் தடுப்பதோடு பிறர் செய்த குற்றங்களுக்காக நிரபராதிகள் தண்டிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் மட்டுமே மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்வதாயின் விசாரணை அதிகாரிகளின் நடவடிக்கைகள் மிகவும் அத்தியாவசியமானவற்றுக்கு அப்பால் செல்லக் கூடாது. அத்தோடு அதிகாரத்தில் உள்ளவர்கள் இஸ்லாமிய நடத்தையைச் சரிவரப் பேணுவோராக இருத்தல் வேண்டும். உதாரணமாக அதிகாரம் உடையவர் ஆணாக இருப்பின் அவர் ஒரு பெண்ணைச் சோதனையிடவோ, பெண்கள் இருக்கும் வீட்டில் நுழையவோ கூடாது. அத்துடன் சுமத்தப்பட்டுள்ள குற்றத்துடன் தொடர்பில்லாத எந்தவொரு பொருளுக்கும் சேதம் விளைவிக்கவோ அதனைப் பறிமுதல் செய்யவோ முடியாது.

## குற்றம் சுமத்தப்பட்டவரை விசாரித்தல்

*விசாரணையாளர் உண்மையை வெளிக்கொணர்வதற்கு உதவக் கூடிய எந்த விடயத்தைப் பற்றியும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரிடம் கேள்விகளைக் கேட்கலாம். அத்தோடு குற்றத்தை அவர் மீது சுமத்தவும் முடியும். எனினும் குற்றம் சுமத்தப்பட்டவர் அக்கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.*

*இஸ்லாமிய சட்டத்தில் குற்றஞ்சுமத்தப்பட்டவர் பல உரிமைகளை அனுபவிக்கின்றார். அவை கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன:*

## எதிர்த்து வாதிடும் உரிமை

*குற்றம் சுமத்தப்பட்டவர் தன்மீது சுமத்தப்பட்டுள்ள எத்தகைய குற்றத்தையும் எதிர்த்து வாதிடுவதற்கு உரிமை பெற்றுள்ளார். முன் வைக்கப்பட்டுள்ள சான்றுகள் செல்லுபடியற்றவை என நிரூபிப்பதன் மூலம் அல்லது அவற்றை மறுதலிக்கின்ற சான்றுகளைச் சமர்ப்பிப் பதன் மூலம் இதனைச் செய்யலாம். எப்படியாயினும், குற்றச்சாட்டு (accusation) குற்றத் தீர்ப்பாக (conviction) மாறாதிருப்பதற்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர் தனக்குள்ள இந்த உரிமையைப் பயன்படுத்த அனு மதிக்கப்படல் வேண்டும். குற்றஞ்சாட்டுதல் எனும் போது சந்தேகத் துக்கு சாத்தியம் உண்டு என்றே பொருள்படும். சந்தேகத்தின் அளவை வைத்து எதிர்வாதத்தின் அளவு தீர்மானிக்கப்படும். எதிர் வழக்காடு பவர் முன்வைக்கும் சான்றுகளை குற்றஞ்சாட்டுபவரின் சான்று களோடு ஒப்பிடுவதன் மூலம் உண்மை தெளிவாகும். விசாரணையின் நோக்கம் இதுவே.*

*எனவே எதிர்வழக்காடல் என்பது குற்றஞ் சுமத்தப்பட்டவர் தம் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளவோ புறக்கணிக்கவோ அவருக் குள்ள உரிமை மட்டுமன்று. அது முழு சமூகத்தினதும் உரிமையும் கடமையுமாகும். ஒருவர் நிரபராதியாக காணப்படுகையில் குற்றத்தீர்ப்பு வழங்காதிருப்பது தனிமனிதனின் நலன்கருதியதாக இருப்பினும் சமூகத்தின் நலனும் அதேயளவு முக்கியத்துவம் பெறுகிறது. நிரபராதி கள்மீது குற்றத்தீர்ப்பு அளிக்காமல் இருப்பதும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிவிடாமல் இருப்பதும் சமூகத்தின் அக்கறை*

*யாகும். இக்காரணத்துக்காகவே ஷரீ'ஆ எதிர்வழக்காடுவதற்கான உரிமையை உத்தரவாதம் செய்வதோடு எச்சூழ்நிலையிலும் எக் காரணத்தாலும் அவ்வுரிமை மறுக்கப்படுவதனைத் தடைசெய்கின்றது.*

*நபிகளார் (ஸல்) அவர்கள் அலி (றழி) அவர்களை யெமனின் ஆளுனராக நியமித்த பின் அவருக்குக் கூறிய அறிவுரையை, நன்கு அறியப்பட்ட ஹதீஸ் ஒன்று பின்வருமாறு அறிவிக்கின்றது:*

*"அலீ, மக்கள் உம்மிடம் தீர்ப்புக் கேட்டு வருவார்கள். பிணக் கொன்றுடன் சம்பந்தப்பட்ட இரு சாராரும் உம்மிடம் வந்தால் அவ்விரு சாராரும் கூற வேண்டியவற்றை நீர் செவிமடுக்காத வரையில் அவர்களுள் எவர் சார்பிலும் தீர்ப்புக்கூற வேண்டாம். இந்த முறையில் மட்டும்தான் நீர் சரியான தீர்ப்புக்கு வர முடியும். இந்த முறையின் மூலம் மாத்திரம்தான் நீர் உண்மையை அறிந்துகொள்ள முடியும்."*

*உமர் இப்ன் அப்த் அல் அஸீஸ் தனது நீதிபதிகளுள் ஒருவருக்குப் பின்வருமாறு கூறியதாக அறிவிக்கப்படுகின்றது: "கண்ணொன்று பிடுங்கப்பட்ட நிலையில் ஒரு வழக்காளி உம்மிடம் வந்தால், அவசரப் பட்டு அவருக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கிடாதீர். ஒரு வேளை வழக் கின் அடுத்த தரப்பைச் சேர்ந்தவர் இரண்டு கண்களும் பிடுங்கப்பட்ட நிலையில் உம்மிடம் வரலாம்."*

*எதிர்த்தரப்பு வாதம் குற்றம் சுமத்தப்பட்டவரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அதுபற்றிய அடிப்படை விதியாக இருக்கிறது. ஏனெனில், அது அவரது உரிமை. அதனை அவரால் செய்ய முடியுமாக இருக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாது போனால், அவர் மீது குற்றத் தீர்ப்பு வழங்கப்பட முடியாது. இதனால்தான், சான்றுகள் தொடர்பான சகல நிபந்தனைகளும் தெளிவான நிலையிலும் 'ஹத்' குற்றச் செயல்களுக்காக ஓர் ஊமையரைத் தண்டிக்க முடியாதுள்ளது. ஏனெனில், அவரால் பேச முடியுமாக இருந்தால், 'ஹத்' தண்டனையை மறுதலிக்கக்கூடிய வகையான சந்தேகமொன்றைக் கிளப்பி விட்டிருக் கலாம். (அதன் விளைவாக தஃஸீர் என்னும் குறைந்த தண்டனை வழங்கவோ அபராதம் விதிக்கவோ நேரிட்டிருக்கலாம்). சைகை மொழியை மாத்திரம் பயன்படுத்தி அவர் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிவிட முடியாத நிலை இருக்கலாம். எனவே, இவ்வாறான சந்தர்ப்பத்தில் 'ஹத்' தண்டனை நிறைவேற்றப்பட்டால்,*

*நீதி வழங்கப்பட்டதாக ஆகாது. ஏனெனில் சந்தேகம் இருக்கின்ற நிலைமையிலேயே அந்த 'ஹத்' தண்டனை நிறைவேற்றப்படுகின்றது.*

## குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர் எதிர்வாதிடுவதற்காக வழக்கறிஞர் ஒருவரின் உதவியை நாடுதல்

*குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர் வழக்கறிஞர் ஒருவரின் உதவியை நாடுவதை அனுமதிப்பது தொடர்பாக ஆரம்ப கால சட்ட அறிஞர்கள் எவ்வித அபிப்பிராயங்களையும் தெரிவித்திருப்பதாக அறிந்துகொள்ள முடியவில்லை. இஸ்லாமிய நடைமுறைச் சட்டம் (அஹ்காம் அல் கதா) பற்றிய நூல்களோ நீதிபதிகளின் ஒழுக்கம் பற்றிய (அதப் அல் காதி) பற்றிய நூல்களோ இது பற்றிக் குறிப்பிடவில்லை. இவ்வாறு குறிப் பிடாததற்குக் காரணம் வரலாற்று ரீதியாக நீதிமன்ற அமர்வுகள் பகிரங் கமாக நடத்தப்பட்டமையாக இருக்கலாம். இவ்வமர்வுகளில் சட்ட அறிஞர்களும் நிபுணர்களும் அதிகளவில் சமூகமளித்திருந்ததனால் அவர்களின் பிரசன்னம் நீதிவழங்கும் விடயத்தில் நீதிபதிக்கு உதவி புரியும் பொறுப்புவாய்ந்ததோர் ஆலோசனை சபையைப் பிரதிநிதித் துவப்படுத்தியது. எனவே தொழில்ரீதியான ஆலோசகர்கள் ஒரு போதும் தேவைப்படவில்லை.*

*இருந்தபோதிலும் இமாம் அபூ ஹனீஃபாவின் கருத்துப்படி நீதி மன்றத்தில் தனது பிரதிநிதியாக இன்னொருவரை நியமிப்பவர், தான் சமுகமளிக்காத நிலையிலும் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பைப் பொறுப் பேற்க வேண்டும். வேறு சட்டநிபுணர்களும் இதுபோன்ற அபிப் பிராயங்களை வழங்கியுள்ளனர். "நான் ஒரு மனிதப்பிறவி மட்டுமே. உங்களில் சிலர் மற்றவர்களைவிடச் சொற்சாதுர்யம் மிக்கவர்கள். எனவே, சில சந்தர்ப்பங்களில் ஒரு வழக்காளி என்னிடம் வரும்போது அவர் உண்மையானவர் எனக் கருதி அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிவிடுவேன். அதனால் நான் எப்பொழுதேனும் (தவறுதலாக) ஒரு முஸ்லிமின் உரிமை இன்னொருவருக்கு வழங்கப்பட வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கிவிட்டால் அது நரக நெருப்பு போன்றதென அறிந்து கொள்ளுங்கள். அதனைப் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். அல்லது (அது இன்னொருவருக்குச் சொந்தமானதென அறியவந்தால்) அதனை விட்டுவிடுங்கள்" எனஅல்லாஹ்வின் தூதர் கூறியதாக ஆதாரபூர்வ மான ஹதீஸொன்று அறிவித்துள்ளது.*

*தேவையான எவ்வழியைக் கையாண்டேனும் தகராறுகளைத் தீர்த்துவைக்குமாறு ஷரீ'ஆ பற்றிய நூல்கள் பல வலியுறுத்துகின்றன. நபிகளாரிடம் கொண்டுவரப்பட்ட வழக்குகளில்கூட அவதானிக்கப் பட்டதுபோல், குறிப்பாக விவாதத்திறனிலும் ஆற்றலிலும் வழக்காளி களிடையே வித்தியாசம் காணப்படுவதை நோக்கும் போது, நியாய மானதொரு தீர்வுக்கு இட்டுச்செல்லக்கூடிய எந்த வழிமுறையும் சட்டப்படி செல்லுபடியானதாய்க் கருதப்படலாம். எனவே குற்றஞ் சுமத்தப்பட்டவர் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டையெதிர்த்து எதிர்வழக்காட இன்னொருவரின் உதவியை நாடத் தீர்மானித்தால் - அவ்வுதவி பக்கச் சார்பற்ற சுதந்திரமான சட்ட ஆலோசகர் ஒருவரிட மிருந்து பெறப்படின் - அது சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும். குற்றஞ் சுமத்தப்பட்டவர் அத்தகையவொரு சட்டஆலோசகரின் உதவியோடு தனக்கெதிரான குற்றச்சாட்டைப் புரிந்துகொள்ளவும் அதுகுறித்து சட்டம் என்ன சொல்கின்றதென அறிந்துகொள்ளவும், முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் வலுவையும் அதனை மறு தலிப்பதற்கு என்ன செய்ய வேண்டும், அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவும் முடியுமாகின்றது. இவை யாவற்றையும் கவனத்தில் கொள்ளும்போது குற்றஞ் சுமத்தப்பட்டவர் தனக்காக எதிர்த்து வாதாடவும் அதற்காக இன்னொருவரின் உதவி யைப்பெறவும் உரிமை பெற்றுள்ளார் என நாம் சரியாக அனு மானிக்கலாம்.*

*அவ்வாறு எதிர்வழக்காடும் வழக்கறிஞர்அவரால் பாதுகாக்கப்படும் மனிதரைவிட அதிக ஆற்றலும் திறமையும் மிக்கவராக இருக்கும் அதே வேளையில் அவர் மறுதரப்பினரை விடத் திறமை மிக்கவராகவும் இருக்கலாம். இதனால் நியாயமானதொரு தீர்வை எய்தமுடியாது போகலாம் எனக்கூறிச் சிலர் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கலாம். ஆனால் முடிந்தளவு சாத்தியமான சமரசத் தீர்வே தேவைப்படுவதாகை யால் ஒருவருக்கு உதவியை மறுப்பதைவிட, தனது தரப்பைத் திருத்தமாக எடுத்துரைப்பதற்கும், மறுதரப்பின் வாதத்தை முறியடிக் கவும் ஆலோசகரின் உதவியைநாட அனுமதிப்பதே சிறந்ததெனக் காட்டி ஒருவர் இக்கருத்தை மறுத்துரைக்க முடியும். எவ்வகைத் தண்டனை வழங்கப்பட வேண்டுமென்பது தொடர்பாக நீதிபதியின்*

மனதில் சந்தேகம் நிலவ இடம் கொடுப்பதைவிட இது சிறந்ததாகும். மேலே குறிப்பிடப்பட்டதுபோல இறுதித்தீர்ப்பின் செல்லுபடியாகும் தன்மை குறித்து எத்தகைய சந்தேகத்துக்கும் இடமளிக்கப்படக் கூடாது.

இரு மனிதர்கள் தமது தகராறை அஹ்மத் பாக்கீயிடம் எடுத்துச் சென்ற நிகழ்வு பற்றி “*குர்தூபா காதிகளின் வரலாறு*” என்ற நூலில் அல் காஷினி கூறுகிறார்: அவர்களில் ஒருவர் தான் சொல்வதை விளங்கிச் சொல்லக் கூடியவராக இருந்தார். மற்றவர் நேர்மையானவராகவும் உண்மை பேசுபவராகவும் இருந்தபோதிலும் அவ்வாறு சொல்லத் தெரியாதவராக இருந்தார். இதனை அவதானித்த அஹ்மத் பாக்கீ, அவர் சார்பாகப் பேசுவதற்கு ஒருவரை கூட்டிவருமாறு ஆலோசனை கூற அம்மனிதரோ தான் உண்மை பேசுவதாகவும் அதனால் வரக்கூடிய விளைவுகளையிட்டுத் தான் கவலைப்படவில்லை என்றும் பதிலளித் தார். அது கேட்டு அஹ்மத் பாக்கீ “(உமது) எதிராளி உண்மையைக் கொலை செய்வதைவிட இதுவொன்றும் மோசமாயிருக்க முடியாது” என்றார். எனினும் அல் மரீதீயின் கருத்துப்படி இன்னொருவரின் உதவியை நாடும்படி நீதிபதி வழக்காளியிடம் கூறினால், அது சட்ட ஆலோசகராக அமர்த்தப்படுபவரின் பணி ஓர் உரிமையை நிலைநாட்ட லேயன்றி அதனை மறுதலிப்பதல்ல. இன்னொருவருக்காக வாதாட ஒருவரை நியமிக்கும் பணியை நீதிபதி செய்யக்கூடாது.

எனவே நாம் இருவகையான நீதிபதிகளைக்காண்கிறோம். ஒருவர் வழக்காளியுடன் எதிர்வழக்காட வழக்கறிஞரின் உதவியைப் பெறு மாறு கூறுகிறார். மற்றவர் அவ்வாறு ஆலோசனை பெறுதல் தகாதது என்கிறார். இவ்விடயத்தில் ஷரீ’ஆவின் தத்துவத்தை மதித்து வழக்காளி சட்ட ஆலோசனை பெற அனுமதிப்பதே சிறந்தது. அது (அல்லாஹ் வின் உரிமை மட்டுமே சம்பந்தப்படும்) ஹுதூத் வழக்காயினும் சரி அல்லது அல்லாஹ்வினதும் அவனது அடியார்களினதும் உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளாயினும்சரி, சட்ட ஆலோசனை பெறும் உரிமை குற்றவியல் சட்டத்தில் தேவைப்படுவதற்கு அதிக சாத்தியம் இருக்கிறது.

சமகால நீதிமன்றங்களில் குற்றஞ் சுமத்தப்பட்டவர் பொதுவாகத் தன்னைவிடத் திறமையான முறையில் சட்டநுட்பங்களை முன்வைக்கக்

*கூடிய ஒரு சட்டத்தரணியை அல்லது பொது வழக்குத் தொடுனரை* (prosecutor) *நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டி வரும். அத்தகைய சூழலில் குற்றஞ் சுமத்துபவரின் வாதங்களை முறியடிக்கும் விதத்தில் தனது வாதங்களை முன்வைப்பதற்கு எவரேனுமொருவரின் சேவை குற்றம் சுமத்தப்பட்டுள்ளவருக்குத் தேவைப்படுகின்றது. வழக்கு விசாரணை நிலையிலிருக்கும்போதே அவ்வுதவியைப் பெற முடியுமா அல்லது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட பின்னர்தான் அது அனுமதிக்கப்படுமா என்பதே இங்கு எழுகின்ற கேள்வியாகும் . இது இஜ்திஹாதுக்கு விடப்பட்டு குற்றஞ்சுமத்தப்பட்டவர் சட்ட ஆலோசனை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டால் அவர் இவ்விரு கட்டங்களிலும் சட்ட ஆலோசனை பெறுவதே மிகச் சிறந்தது. வழக்கின் உண்மைகளை நிறுவுதற்கு இது உதவியாயிருக்கும். அத்துடன் நல்ல விளைவு தரக்கூடிய முறையில் எதிர்வழக்காடி குற்றச்சாட்டை மறுத்துரைக்க வேண்டுமாயின் சுமத்தப்பட்ட குற்றம் பற்றியும் இருக்கும் சான்றுகள் பற்றியும் முழுமையாகப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. அத்துடன் குற்றஞ் சுமத்தப்பட்டவர் நிரபராதி என்பதற்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை பயன்தரு முறையில் முன்வைக்கப்படல் வேண்டும். குற்றச்சாட்டுகள் பதிவாகிய நாளிலிருந்து குற்றஞ் சுமத்தப்பட்டவர் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படல் வேண்டுமென்பதை இது சுட்டிக் காட்டுகின்றது.*

## குற்றஞ்சுமத்தப்பட்டவர் மௌனம் சாதிப்பதற்கும் விளக்கமளிப்பதற்குமான உரிமை

*பழிவாங்கப்படல், தகவல் பெறுவதற்காக போதைமருந்து மற்றும் மனோவசியம் போன்றவற்றுக்கு உட்படுத்தப்படல் போன்ற அச்சுறுத்தல்களின்றி சுதந்திரமாக எதையும் வெளியிடக்கூடிய உரிமை குற்றம் சுமத்தப்பட்டுள்ளவருக்கு உண்டு.*[38] *அவர் நாடினால் கேள்விகளுக்கு விடையளிக்காமல் இருக்க முடியும. அவர் பதிலளித்து, அதன் பின்னர் அவரது பதில்கள் தவறானவை என நிலைநாட்டப்பட்டால் அவர் பொய்ச் சாட்சியம் அளித்தார் என குற்றஞ் சாட்டப்படவோ தண்டிக்*

---

*38. ஸமீர் அல் ஜன்ஸூரி, அல் மஜல்லாஹ் அல் அரபிய்யாஹ், இல. 7 (மார்ச் 1978):119*

*கப்படவோ முடியாது. குற்றஞ் சுமத்தப்பட்டவர் 'ஹத்' குற்றமொன்றை ஒப்புக் கொண்டால் அல்லது அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டால் அவர் தனது வாக்குமூலத்தை வாபஸ் பெற்று அதன் மூலம் தனது முன்னைய குற்ற ஒப்புதலை ரத்துச் செய்து கொள்ள லாம்.*

## பலவந்தத்தின் மூலம் பெறப்படும் குற்ற ஒப்புதல்

*குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவரைப் பலவந்தப்படுத்த முடியாது.*

*இப்ன் ஹஸ்ம் பின்வருமாறு எழுதியுள்ளார்:*

*"எனவே அடித்து, சிறைப்படுத்தி, அச்சுறுத்தி ஒருவரைக் கொடுமைப் படுத்த முடியாது. இவ்வாறு நடத்தப்படுவதை அனுமதிக்கும் எதுவும் குர்ஆனிலோ நிறுவப்பட்ட ஸுன்னனாஹ்விலோ அல்லது இஜ்மா விலோ இல்லை. இம்மூன்று ஆதாரங்களிலும் காணப்படாத எதுவும் சன்மார்க்கம் சார்ந்ததாக இருக்க முடியாது. இதற்கு நேர்மாற்றமாக, மகத்துவம் மிக்க அல்லாஹ் இதனைத் தடை செய்துள்ளதோடு பின் வருமாறு கூறும்படி அவன் தன் தூதரைப் பணித்துள்ளான்: "நிச்சய மாக உங்கள் இரத்தம், உங்கள் செல்வம், உங்கள் நற்பெயர், உங்கள் உடல் என்பன உங்களுக்குப் புனிதமானவை." எனவே உடல், நற்பெயர் இரண்டையும் அல்லாஹ் புனிதமாக்கி இருக்கும் போது குர்ஆன்- ஸுன்னாஹ்வுடைய சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலன்றி முஸ்லிம்களை உடல் ரீதியாகவோ அல்லது வார்த்தைகளாலோ துன் புறுத்துவதை அவன் தடைசெய்துள்ளான்.*[39]

*குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கு முன்பு நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய நிபந்தனை சுயமாகவே தேர்ந்தெடுத்தல் ஆகும். சுயமாக முன் வந்து குற்றத்தை ஒப்புக்கொள்ளல் செல்லுபடியானதாகக் கருதப்படும். ஏனெனில் அது மழுப்புதல் இல்லாத உண்மையாக இருக்கும். பகுத்தறிவுள்ள ஒரு மனிதன் தனக்கு ஊறு விளைவிக்கக்கூடிய ஒன்றைத் தகுந்த காரணமின்றி ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்ற உண்மை யை இவ்வெடுகோள் அடிப்படையாகக் கொண்டுள்ளது. குற்றத்தை அல்லது அதற்கான பொறுப்பை பலவந்தமாக ஒப்புக்கொள்ளச்*

*39. இப்ன் ஹஸ்ம், அல் முஹல்லா, பாகம் 11. ப 141*

*செய்தால் அது பொய்யாக இருப்பதற்குரிய சாத்தியப்பாடு, அது உண்மையாக இருப்பதற்கு உள்ளதைவிடக் கூடுதலாக இருக்கும். இதற்குக் காரணம் பலவந்தப்படுத்தலே. நிச்சயமான அல்லது உடனடியான பெரிய தீங்கிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்குடன் குற்ற ஒப்புதல் நிகழ்வதால் அது சுயமாக, சுதந்திரமாக மேற்கொள்ளப் பட்டதாகக் கருதப்பட முடியாது. இதனால்தான் பலவந்தமான குற்ற ஒப்புதல் செல்லுபடியாகாததும் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட முடியாததுமாகும் எனப் பெரும்பான்மையான ஃபிக்ஹு அறிஞர்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.*

*"எவருடைய உள்ளம் ஈமானில் அமைதிபெற்றிருக்க அவர் (நிராகரிக்குமாறு) நிர்ப்பந்திக்கப்படுகின்றாரோ அவரைத் தவிர"என நாம் அல் குர்ஆனில் (16:106) ஓதுகின்றோம். இங்கு பலவந்தம் நிகழ்வதன் காரணமாக நிராகரிக்கின்றதன் பாவமும் மதத்தைவிட்டு வெளியேறி யதற்கான தண்டனையும் ரத்துச் செய்யப்படுவதாக அல்லாஹ் கூறுகிறான். எனவே ஏனைய விவகாரங்களை ரத்துச் செய்வதற்கும் இதனைக் கருத்தில் கொள்ளலாம். "ஞாபகமறதி காரணமாகவும் பலவந்தம் காரணமாகவும் செய்யப்படும் தவறுகளுக்கான பொறுப்பு எனது உம்மாவிலிருந்து அகற்றப்பட்டுள்ளது"[40] என ஒரு ஹதீஸ் கூறுகின்றது. அபூ தாவூத் பின்வருமாறு அறிவிக்கின்றார்: களாய் கோத்திரத்தினரின் சில பொருட்கள் திருட்டுப் போயின. அவர்கள் சில நெசவாளர்களை இந்தத் திருட்டுக்குக் குற்றம் சாட்டினர். இவ்வழக்கு நபித் தோழர் நுஃமான் இப்ன் பஷீரிடம் கொண்டுவரப்பட்டது. அவர் அந்த நெசவாளர்களைச் சில நாட்கள் சிறைவைத்து விட்டுப் பின்னர் விடுதலைசெய்தார். களாய் கோத்திரத்தினர் நுஃமானிடம் போய் "அவர்களை அடித்து வதைக்காமல் எப்படி விடுதலை செய்தீர்கள்?" எனக் கேட்டதற்கு நுஃமான் "நீங்கள் என்ன எதிர்பார்த்தீர்கள்? அவர்களுக்கு நான் தீங்கு செய்ய வேண்டுமென விரும்பினீர்களா? திருட்டுப் போன பொருள் (எங்கே வைக்கப்பட்டிருக்கின்றதென சொல்லுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டபின்) உங்கள் பொருட்*

---

*40 இந்த ஹதீஸின் வேறுபட்ட அறிவிப்புகள் உள்ளன. இவற்றுட் சில ஆதாரபூர்வமானவை. விவரங்களுக்கு எனது 'அல் ராஸியின் அல் மஹ்ஸூல்' பதிப்பைப் பார்க்க: பாகம் 1 (பெய்ரூத்: அல் ரிஸாலா 1992),233*

கள் கிடைத்துவிட்டால் சரி தான். அப்படிக் கிடைக்காத பட்சத்தில் சாட்டையடி கொடுத்து அவர்களது தோலை உரிக்க நேர்ந்தால் அதே போன்று உங்கள் தோலையும் உரிக்கவேண்டி நேரிடும்" என்றார். "இதுவா உங்கள் முடிவு?"என அக்கோத்திரத்தினர் மீண்டும் கேட்டதற்கு "இது அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் முடிவாகும்" எனப் பதிலளித்தார் நுஃமான். [41]

உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்: "ஒருவர் பட்டினி போடப்பட்டால், கால் விலங்கு மாட்டப்பட்டால் அல்லது அடித்துத் துன்புறுத்தப் பட்டால் அவர் அவருக்குப் பொறுப்பாக மாட்டார்."[42] ஷுரைப் கூறினார்: தடுத்துவைத்தல் பலவந்தப்படுத்தலாகும். அச்சுறுத்தல் பலவந்தப் படுத்தலாகும். சிறைவைத்தல் பலவந்தப்படுத்தலாகும். அடித்தல் பலவந்தப்படுத்தலாகும்."[43] ஷ'அபீ சொல்கிறார்: "மக்களுக்குக் கொடுமை விளைவிப்பது (கண்டிக்கத்தக்க) பித்அத் (வழிகேடு) ஆகும்."

அதிகாரிகள் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிராக பலாத்காரத்தைப் பிரயோகிப்பதை ஷரீ'ஆ ஒருபோதும் நியாயப்படுத்தாது என அறிஞர்கள் எப்போதும் கருதியிருக்கிறார்கள் என்பது மேலே கூறப் பட்டவற்றிலிருந்து தெளிவாகின்றது. மேலும் அது அல்லாஹ்வினால் தடை செய்யப்பட்டுள்ளது. அவன் தனது தூதர் மூலம் அறிவிக்கின் றான்: "நிச்சயமாக ஒரு முஸ்லிமின் ஒவ்வோர் அம்சமும் இன்னொரு முஸ்லிமுக்குப் புனிதமானது. அவரது இரத்தமும் செல்வமும் நற்பெயரும் இதிலடங்கும்."

உராக் இப்ன் மாலிக் என்பவரை ஆதாரம் காட்டி அறிவிக்கப் படுவதாவது:

"கஃப்பார் கோத்திரத்தைச் சேர்ந்த இருவர், மதீனாவின் நீரால் வளம் பெற்ற ஒரு பாலைவனப் பசுந்தரையை அடைந்தனர். அங்கு கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த பலர் தம் ஒட்டகங்களை மேயவிட்டுக் கொண்டிருந்தனர். மறுநாள் காலையில் அவர்கள் கண்விழித்தபோது அவர்களது ஒட்டகங்களில் இரண்டைக் காணவில்லை. அவர்கள்

---

41. அபூ தாவூத், ஸுனன், ஹதீஸ் இல.4382. இதே ஹதீஸ் அல் நஸாயீயாலும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹதீஸ் இல.4878.

42. அப்த் அல் ரஸ்ஸாக், அல் முஸன்னஃப், பாகம் 10 ப.193

43. அதே நூல்

*கஃப்பாரிகள் இருவரையும் குற்றஞ்சாட்டி அவர்களை நபிகளாரிடம் அழைத்துச் சென்று நடந்ததைக் கூறினர். நபி (ஸல்) அவர்கள் அவ் விருவரில் ஒருவரைத் தடுத்து வைத்துக்கொண்டு, அவற்றைப்போய்த் தேடுமாறு மற்றவரை அனுப்பி வைத்தார்கள். தடுத்து வைக்கப்பட்டவர் அவரது தோழர் ஒட்டகங்களோடு திரும்பும்வரை சிறைக்கைதி போன்று நடத்தப்பட்டார். அவர்களில் ஒருவரிடமோ, தடுத்து வைக்கப் பட்டவரிடமோ நபி (ஸல்) அவர்கள் "என்னை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் கேட்பீராக!" என்றார்கள். அப்போது கஃப்பாரி கோத் திரத்தைச் சேர்ந்த அம்மனிதரும் "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக!" என்றார். அச்சமயம் நபிகளார் "அத்துடன் அல்லாஹ் உம்மை அவன் வழியில் உயிர்த்தியாகியாக்குவானாக!" என்றனர். அம்மனிதர் பின்னர் உஹுத் போரில் உயிர்த் தியாகியானார்."[44]*

*அப்துல்லாஹ் இப்ன் அபூ ஆமிரை ஆதாரம் காட்டி அறிவிக்கப்படு வதாவது:*

*நான் சில ஒட்டகமோட்டிகளுடன் பயணித்து துஅல் மர்வாஹ் என்ற இடத்தை அடைந்தபோது எனது ஆடைகளைக் கொண்ட பைகளுள் ஒன்று திருட்டுப் போய்விட்டது. எங்களுள் ஒருவரை நாம் சந் தேகித்தோம். அவரிடம் என் தோழர் சென்று "ஏய்! அவரது பையை அவரிடம் கொடுத்துவிடும்" எனக் கூறினார். எனினும், "நான் அதனை எடுக்கவில்லை" என அவர் சொன்னார். திரும்பிச் சென்றதும் நான் உமர் அல் கத்தாபிடம் நடந்தவற்றைக் கூறினேன்.. "நீங்கள் எத்தனை பேர் அங்கே இருந்தீர்கள்?" என அவர் கேட்டார். நான் என்னுடன் இருந்தவர்களைக் குறிப்பிட்டுவிட்டு, "விசுவாசிகளின்தலைவரே, அம் மனிதனை சங்கிலியால் பிணைத்து அழைத்து வர வேண்டுமென நான் விரும்பினேன்"எனஅவரிடம் கூறினேன். "நீர் அம்மனிதனை சங்கிலி யால் பிணைத்துக் கூட்டிவர நினைக்கிறீர். ஆனால் உம்மிடம் எவ்வித சாட்சியமுமில்லை. எனவே நான் உமது இழப்புக்கு நஷ்டஈடு வாங் கித்தரப் போவதுமில்லை. அதனைப் பற்றி விசாரணை செய்யப் போவதுமில்லை" எனக் கூறிவிட்டார் உமர். அவர் மிகுந்த கலவர மடைந்ததுடன் எனக்கு நஷ்டஈடு வாங்கித்தரவும் இல்லை; அது பற்றி விசாரணை செய்யவுமில்லை.[45]*

---

*44. அப்த் அல் ரஸ்ஸாக், அல் முஸன்னஃப், ப.216*

*45 . அதே நூல்*

*இங்கு, குற்றஞ் சாட்டப்பட்டதைத் தவிர வேறெந்த அடிப்படையு மின்றி தடுத்துவைத்தமைக்காக ஒருவரிடம் நபி (ஸல்) அவர்கள் பாவமன்னிப்பு கேட்டார்கள். சாட்சியங்களேதும் இல்லாத நிலையில் குற்றம் சுமத்தப்பட்டவர் கைது செய்யப்பட வேண்டுமெனக் கேட்கப் பட்டபோது பொருளைப் பறிகொடுத்தவரின் உரிமை செல்லுபடியா காதென உமர் (றழி) கருதினார். பலவந்தத்தின் கீழ் சொல்லப்படும் எதுவும் செல்லுபடியாகாது என்பதன் அடிப்படையில், பலவந்தத்தின் மூலம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் செல்லுபடியாகாது என்பதும் அதன் விளைவாக எதுவும் சட்டபூர்வமாகிவிடாது என்பதும் பெரும்பான் மையான அறிஞர்களின் கருத்தாகும்.[46]*

*எனினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒழுக்கக்கேட்டுக்கும் தீச் செய லுக்கும் பெயர்போனவராக அறியப்பட்டிருப்பின் திருட்டுக் குற்றம் போன்றவை தொடர்பாக அவரிடம் பலவந்தத்தைப் பிரயோகித்துப் பெறப்படும் குற்ற ஒப்புதல் செல்லுபடியாகும் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.*

*இதற்கவர்கள் இப்னு உமர்அறிவிக்கும் பின்வரும் ஹதீஸை உதாரணம் காட்டுகின்றனர்:*

*கைபர் வாசிகள் அவர்களது கோட்டைக்குள் சென்று அடைக்கலம் புகும்வரை நபிகளார் அவர்களுடன் யுத்தம் புரிந்தனர். அவர்களது உயிர்கள், பயிர்கள், பழத்தோட்டங்கள் யாவும் முஸ்லிம்களின் கை களுக்குச் சென்றது கண்டு அவர்கள் தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்ளவும் தம்மால் எடுத்துச் செல்லக்கூடிய அளவு பொருட்களை எடுத்துச்செல்லவும் அனுமதிக்கும் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத் திட்டனர். எனினும் அவர்களது அனைத்துப் பொன்னும் வெள்ளியும்*

---

*46. பார்க்க: இப்ன் குதாமா, அல் முக்னி, பாகம் 15, ப.12; அல்-பாஹூதி, கஷ்ஷாஃப் அல் கினா, பாகம் 6, ப.454; அல்-பத்லயூஸீ, அல் இன்ஸாஃப், பாகம் 12, ப 133; அல்-ஷஹராபாதி, முக்னி அல் முஹ்தாஜ், பாகம் 2, ப 240; அல்-பய்ரூஸாபாதி, அல் முஹத்தப், பாகம் 2, ப. 362; அல்-கைஸானீ, பதாயீ அல் ஸனாயீ, பாகம் 7, ப.189; அல்-மிர்கனானீ, அல் ஹிதாயாஹ், பாகம் 3, ப. 275; அல்-ஸர்கஷீ, அல் மப்ஸூத், பாகம் 9, ப. 184-85; அல்-தஸூகி அல் தஸூகி ஆலா அல் ஷர்ஹ் அல் கபீர், பாகம் 3, ப. 348; அல்-கராஷீ, அல் கராஷி, பாகம் 6, ப. 87; இப்ன் ஹஸ்ம், அல் முஹல்லா, பாகம் 2, ப 288; இப்ன் அல் மதூரீதீ, அல் பஹ்ர் அல்ஸக்ஹார், பாகம் 5, ப 3.*

நபிகளாரிடம் விடப்படுவதற்கு ஏற்பாடாயிற்று. அவர்கள் எதையும் ஒளிக்கக்கூடாது என்ற நிபந்தனையிலேயே இதுஅனுமதிக்கப்பட்டது. இப்புரிதலை அவர்கள் மீறினால் உடன்படிக்கையும் கிடையாது. பாதுகாப்பும் கிடைக்காது. இருந்தபோதிலும் ஹுயைய் இப்னு அக்தாப் என்பவர் நஸீர் கோத்திரத்தாரோடு வெளியேற்றப்பட்ட போது அவர் தம்முடன் கொண்டுவந்த பணம், நகைகள் முதலியவற் றோடு சிறிது கஸ்தூரியையும் அவர்கள் மறைத்து வைத்திருந்தார்கள். “நஸீர்களிடமிருந்து உமது மருமகன் கொண்டுவந்த கஸ்தூரி எங்கே?” என்று அவரது மாமனிடம் நபிகளார் கேட்க “அது போர்களுக்காகவும் வேறு காரியங்களுக்காகவும் செலவாகிவிட்டது” என அவர் கூறினார். “ஆனால் அவர் அண்மையில்தான் வந்திருக்கிறார். அதனைவிட அதிக பணம் அவரிடம் இருக்க வேண்டுமே” எனச் சொல்லிவிட்டு நபிகளார் அந்த மனிதரை ஸுபைரிடம் ஒப்படைத்தார்கள். ஸுபைர் அவரைச் சில தண்டனைகளுக்கு ஆளாக்கினார்.[47] அதேவேளை ஹுயைய் போய் சில இடிபாடுகளுக்கு மத்தியில் ஒளிந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அங்கு சென்று பரிசோதித்தபோது அந்த இடிபாடுகளுக்கிடையே கஸ்தூரி ஒளித்து வைக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.[48]

இந்த ஹதீஸ் சண்டையிடுவதன் மூலம் ஓர் ஒப்பந்தத்தை முறித் துக்கொண்டு, இன்னொரு ஒப்பந்தத்தின் மூலம் புகலிடம் கோரி அதனையும் முறித்த யுத்தகாலச் சூழ்நிலையில் இருந்த யூதர்களோடு சம்பந்தப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்படாத ஒரு முஸ்லிம் நிரபராதிக்கு வதைகொடுப்பதற்கு இந்த ஹதீஸை உதாரணங்காட்டுவது எப்படிப் பொருந்தும்?

---

47. உதாரணமாக தகவலுக்காக அல்லது குற்ற ஒப்புதலுக்காகப் பலவந் தப் படுத்தல். இதுஹதீஸின் ஒரு பகுதி. இந்த ஹதீஸின் பல்வேறு அறிவிப் புக்களில் ஒரேயோர் அறிவிப்பில் மட்டுமே இப்பகுதி இடம்பெற்றுள்ளது. அடுத்து வரும் அடிக்குறிப்பைப் பார்க்க.

48. இந்த ஹதீஸ் அல் பைஹக்கீயின் *ஸுனன் அல் அஹ்காமில்* ஆதார பூர்வமான அறிவிப்பாளர்கள் வரிசையுடன் இடம்பெற்றுள்ளது. பாகம் 9, ப. 137; அபூ தாவூத் அறிவிக்கும் ஹதீஸில் (3006) மாமனார் ஸுபைரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடப்படவில்லை; இப்னு ஹஜரின் *ஃபத் ஹுல் பாரி*யிலும் இவ்வாறே அறிவிக்கப்பட்டுள்ளது. பாகம் 7, ப.366-67; மேலும் பார்க்க: இப்ன் ஆபிதீனின் *ஹாஷிய்யாஹ்* பாகம் 3, ப. 270; இப்ன் கய்யிமின் *அல்துருக் அல் ஹுக்மிய்யாஹ்*, ப 7-8.

*பிற்காலத்து ஹனஃபி அறிஞர்கள் சிலர் பலவந்தத்தைப் பிரயோகித்துப் பெறப்பட்டகுற்ற ஒப்புதல் செல்லுபடியானதே என்றனர். "நமது காலத்தில் எந்தத் திருடனும் திருட்டை ஒப்புக்கொள்ள விரும்பாததனால் திருட்டு சம்பந்தமாக பலவந்தத்தைப் பிரயோகித்துப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் செல்லுபடியாகுமெனப் பின்னாளில் வந்த எமது ஷெய்குகளில் சிலர் மார்க்கத் தீர்ப்புக்கள் வழங்கினர்" என ஷர்காஸீ தமது 'மஹ்ஸூஃப்' என்ற நூலில் எழுதியுள்ளார்.*

*திருடிய ஒருவர் தான் திருடியதை மறுப்பதையிட்டு இமாம் அபூ ஹனீஃபாவின் இரு தோழர்களுடன்[49] தொடர்புவைத்திருந்த இஷாம் இப்ன் யூஸுஃபிடம் வினவப்பட்டபோது "அதனையிட்டுஅவர் சத்தியம் செய்யட்டும்" என்றார் இஷாம்.[50] ஆனால் அதற்கு அமீர் ஆட்சேபனை தெரிவித்து " திருடன் சத்தியம் செய்வதா? எடுங்கள் சாட்டையை!" என்றார். பத்துச் சாட்டையடி விழுவதற்குள் அந்த மனிதர் திருட்டை ஒப்புக்கொண்டார். திருட்டுப்போன பொருட்கள் மீட்கப்பட்டன. அதைக் கண்ணுற்ற இஷாம் "அல்லாஹ்வைத் துதி செய்வோம்! இவ்வழக்கில்போல் ஓர் அநீதி நீதியைப் போல் தோற்றமளித்ததை நான் வேறெதிலும் கண்டதில்லை" என்றார்.*

*இப்னு பஸாஸீயாஹ்வின் ஃபத்வா தொகுப்பானது பலவந்தத்தின் மூலம் பெறப்படும் குற்ற ஒப்புதலை ஆதரிக்கின்றது. திருடன் எனச்*

---

*49. இவர்கள் அபூ யூஸுஃப், முஹம்மத் இப்ன் அல் ஹஸன் அல் ஷைபானீ ஆகிய .அவரது இரு தோழர்கள். அவரது சட்ட சிந்தனைகளையும் கருத்துக்களையும் பாதுகாப்பதிலும் பரப்புவதிலும் முக்கிய பங்கெடுத்தவர்கள். இஜ்திஹாதில் கூட்டாகப் பங்குபற்றிய தோழர்களால் அபூ ஹனீஃபா சூழப்பட்டிருந்தார் என்பது நன்கறியப்பட்டதே. பார்க்க: ஸாஹித் அல் கவ்தாரீயின் ஃபிக்ஹ் அஹ்ல் அல் ஈராக் வ ஹதீதுஹூம்*

*50. வாதியால் சான்றுகளை முன்வைக்க முடியாத நிலையில் எதிர்தரப்பினரின் சத்தியப் பிரமாணத்தின் மூலம் உரிமையைத் தீர்மானிப்பது பொதுவிதி இது . இது 'வழக்காளிக்கு சான்று, எதிர்த்தரப்பிற்கு சத்தியப் பிரமாணம்' என்ற சட்டக் கோட்பாட்டுக்கு இயைபானது. திருடுதல் போன்ற 'ஹத்' தண்டனை சம்பந்தப்பட்ட வழக்குகளில் இது பொதுவாக உபயோகிக்கப் படுவதில்லை. அமீர் தீர்ப்புக்கு ஏன் ஆட்சேபனை தெரிவித்தார் என்பதை இது விளக்குகின்றது.*

சந்தேகிக்கப்படுபவரைத் தான் குற்றவாளியென ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக அவரை அடிக்க அனுமதியுண்டாவென வினவப்பட்ட போது ஹஸன் இப்ன் அல் ஸியாத் அளித்த பதில் "தோலை உரித் தாலன்றி எலும்பு வெளியே தெரியாது" என்பதே.[51]

இப்ன் ஆபிதீன் இவ்வாறு எழுதுகின்றார்: "திருட்டுக் குற்றம் சாட்டப் பட்டவரை அடிப்பது அரசியல் சார்ந்ததாகும். எனவே எது அரசிய லோ அதனைக் காதி (நீதிபதி) செய்யலாம். ஏனெனில் அரசியலென்பது இமாமுக்கு மட்டுமேயுரிய பிரத்தியேக ஆட்சிப் பரப்பல்ல என அபிப்பிராயப்படுகிறார் அல் ஸைலாய்."[52] எனினும் இவ்வறிஞர்களின் கருத்துக்களை ஆதரிப்பதற்கு யாதொரு ஆதாரமும் கிடையாது. எப்படியிருப்பினும் இது 'அநீதி'யென ஹனஃபீ மத்ஹபைச் சேர்ந்த இமாம் யூஸுஃப் வர்ணிப்பதே இதனை மறுப்பதற்குப் போதுமான தாகும்.

மேலும் பலாத்காரத்தைப் பயன்படுத்தியோ அதனைக் காட்டி அச்சுறுத்துவதன் மூலமோ குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்வது சட்டவிரோதமானதென்ற பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்தை இக்காரணங்கள் எதுவும் மறுப்பதுமில்லை; வலுவிழக்கச் செய்வதுமில்லை. மேலும் குற்றஞ் சுமத்தப்பட்டவர் குற்றவாளிதான் என்பதையும் அவர் திருடப்பட்ட பொருளை ஒளித்து வைத்திருந்தார் என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் இருந்தால் மட்டுமே அல்லது 'ஹத்' தண்டனை நிறைவேற்றப்படு வதற்குத் தேவைப்படும் சாட்சியங்கள் இல்லாதபோது மட்டுமே, அவர்களது அபிப்பிராயம் செல்லுபடியாகும். இத்தகைய நிலையில் திருடப்பட்ட பொருளை மீட்பதற்காக நீதிபதி பலாத்காரத்தைப் பிரயோகிக்கலாம்.

ஆனால் அப்போதும் அவர்களது அபிப்பிராயங்களை ஆதரிப் பதற்குரிய சான்றுகள் இல்லை. உண்மையில் திருட்டுக் குற்றத்தைத் தவிர வேறெதிலும் பலாத்காரத்தின் மூலம் குற்றத்தை ஒப்புக்கொள்ளச்

---

51. பார்க்க: அல்-ரிபாய், *தன்வீர் அல் அப்ஸார்*. அத்துடன் அதற்கு இப்ன் ஆபிதீனின் விளக்கவுரை, பாகம் 3, ப 270.

52. பார்க்க: இப்ன் ஆபிதீனின் *ஹாஷிய்யாஹ்*, பாகம் 3, ப 259.

செய்தல் ஒருபோதும் செல்லுபடியாகாது என்ற பெரும்பான்மை அறிஞர்களது கருத்துடன் ஹனஃபீ அறிஞர்கள் உடன்பட்டனர். திருட்டுக் குற்றத்திலும்கூட திருடப்பட்ட பொருளை மீட்பதற்காக மட்டுமே பலாத்காரத்தைப் பிரயோகிக்கலாம் என அவர்கள் கருதினர். அப்படியில்லாத பட்சத்தில், பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டுள்ளது எனச் சந்தேகம் ஏற்படின் திருட்டுக் குற்றத்திற்காகக் காகக் கையை வெட்டும் தண்டனையை நிறைவேற்றாது விடலாம்.[53]

ஏற்கனவே தீயசெயல்களுக்காகப் பெயர்பெற்ற ஒருவர் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டால், அவரை அடிக்கலாம் என்ற தனது ஆசான் இப்ன் தைமியாவின் கருத்தை இப்ன் அல் கய்யிம் ஆதரிக்கின்றார். ஆனால் திருட்டுப்போன பொருட்களை மீட்பதற்கு மட்டுமே இவ்வுபாயம் கடைப்பிடிக்கப்பட்டது. திருடப்பட்ட பொருள் திருடனிடம் இருப்பதே அவன் தண்டிக்கப்படுவதற்குப் போதுமான தாகையால், ஹத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு பலாத்காரத்தின் மூலம் குற்றத்தை ஒப்புக்கொண்டதுதான் காரணமெனக் கொள்ள முடியாது என்பதே அவரது அபிப்பிராயம். அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்: குற்றஞ் சுமத்தப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக அடிக்கப்பட்ட பின்னர் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு, திருட்டுப்போன பொருள் எங்கு வைக்கப்பட்டுள்ளது என அவர் கூறி, அதே இடத்தில் அவை கண்டுபிடிக்கப்படுமானால், அவரது கை துண்டிக்கப்படலாம். இங்கு பலாத்காரத்தின் மூலம் பெறப்பட்ட குற்ற ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டு 'ஹத்' தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை. பதிலாக, அந்த ஒப்புதல் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் திருட்டுப்பொருள் காணப்பட்ட தனாலேயே அது நிறைவேற்றப்படுகிறது என அவர் எழுதியுள்ளார்.[54]

இப்ன் ஹஸம் கூறுகிறார்:

"பலாத்காரத்தால் பெறப்படும் குற்ற ஒப்புதலைத் தவிர வேறு ஆதாரமேதும் இன்றேல், அதனால் எவ்விதப் பயனும் இல்லை.

---

53. அதே நூல் பாகம் 4, ப. 651. (சிறிதளவு சந்தேகம் இருப்பினும் ஹத் தண்டனை நிறைவேற்றப்படலாகாதென்பது பொதுவிதி.)

54. பார்க்க: இப்ன் கய்யிம், அல் துருக் அல் ஹூக்மீயாஹ், ப 104

அத்தகைய குற்ற ஒப்புதலை அனுமதிப்பதற்குக் குர்ஆனிலோ ஹதீஸிலோ இஜ்மாவிலோ எவ்வித ஆதாரமுமில்லை. மேலும் ஒருவரது சதையும இரத்தமும் புனிதமானதென்பது நிறுவப்பட்ட உண்மை. எனவே குர்ஆன் மற்றும் ஸுன்னாஹ்விலோ இஜ்மாவிலோ உள்ளதையன்றி வேறொன்றை சட்டபூர்வமானதாகக் கொள்ள முடியாது. இருந்தபோதிலும் குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்ற ஒப்புதலுடன் அந்த ஒப்புதலை நிரூபிக்கக்கூடிய ஆதாரம் இருந்து சந்தேகமின்றி அவர் குற்றவாளியாய்க் காணப்படின் அப்போது அவருக்கெதிராக 'ஹத்' தண்டனை நிறைவேற்றப்படல் கடமையாகும்.[55]

குற்ற ஒப்புதலின் அடிப்படையில் மட்டுமன்றி வேறு வகைகளில் பெறப்படும் தீர்க்கமான சான்றுகளின் அடிப்படையிலும் வழக்குத் தீர்க்கப்படலாம் என இப்ன் கய்யிம் குறிப்பிடுவது இப்னு ஹஸ்ம் கொண்டிருந்த நோக்கத்திலிருந்த வேறுபட்டதென நான் கருதவில்லை. மேலே குறிப்பிடப்பட்டது போன்று பலாத்காரத்தின் மூலம் பெறப்படும் குற்ற ஒப்புதல் செல்லுபடியாகாதென்பது பெரும்பாலான சட்ட நிபுணர்களின் முடிவாகும். மேலும் சந்தர்ப்ப சூழ்நிலைச் சான்றுகள் வேறுவிதமாக இருப்பினும்கூட - உதாரணமாகத் திருடப்பட்ட பொருட்கள் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரின் வீட்டில் கண்டெடுக்கப்படுதல் - பலவந்தமாகப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் செல்லபடியாகாது என்ற நியமம் பொருத்தமாக இருக்கும். குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரை அக்குற்றத்தில் சம்பந்தப்படுத்துவதற்காகத் திட்டமிட்டு, திருடப்பட்ட பொருட்கள் வேறுயாராலும் அவரது வீட்டில் வைக்கப்படக்கூடிய சாத்தியம் இருப்பதே இதற்குக் காரணம்.[56]

பலாத்காரத்தைத் தடைசெய்யும் விடயத்திலும் பலாத்காரத்தின் மூலம் பெறப்படுவனவற்றின் சட்டபூர்வதன்மையை இல்லாமற் செய்வதிலும் பெரும்பான்மையினரின் அபிப்பிராயம் மேலோங்கி நிற்பதாகவே கொள்ளப்படல் வேண்டும். உண்மையையும் நீதியையும் நிலைநாட்டும் விடயத்தில் இக்கருத்து குர்ஆனினதும் ஸுன்னாஹ்வினதும் போதனைகளுடன் இணங்கிப் போகின்றது. பலவந்தமாகப் பெறப்படும் குற்ற ஒப்புதல் உண்மையானதாகவோ அதன் அடிப்

55. இப்ன் ஹஸ்ம், *அல் முஹல்லா*, பாகம் 11, ப 142

56. பார்க்க: அல் ஸர்கானி, *ஷர்ஹ் அல் முவத்தா*

படையில் வழங்கப்படும் தண்டனை நியாயமானதாகவோ கருதப்பட முடியாது. மேலும் உண்மையும் நீதியும் நிலைபெறுவதற்கு வழங்கப் படும் உத்தரவாதமே சமூகத்தை அச்சுறுத்தும் அபாயங்களைத் தடுக்க ஒரே வழி. எனவே பலாத்காரம் பல தீமைகளுக்கு மூலகாரணமெனக் கருதப்பட வேண்டும்.

## உபாயங்களால் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்தல்

குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக உபாயங்களைக் கையாளல் விரும்பத்தக்கதெனக் கூறும் இப்ன் ஹஸ்ம் ஒரு ஹதீஸை உதாரணம் காட்டுகிறார்.[57] பாறாங்கல்லைக் கொண்டு தலையை நொறுக்கி சிறுமியொருத்தியைக் கொலை செய்த யூதனைச் சிக்கச் செய்வதற்காக நபிகளார் ஓர் உபாயத்தைக் கையாண்டார்கள். அந்த யூதன் தாக்கியதை, அச்சிறுமி இறப்பதற்குமுன் அவள் மூலமே அறிந்துகொண்ட நபிகளார், அவனிடம் அதுபற்றி கேள்விக்கு மேல் கேள்வி கேட்டார்கள். இறுதியில் மனமிளகிய அவன் குற்றத்தை ஒப்புக் கொண்டான்.[58]

அதே போன்று, நபித்தோழர்களும் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக உபாயங்களைக் கையாண்டதை இப்ன் ஹஸ்ம் குறிப் பிட்டுள்ளார். இதில் பலாத்காரமோ சித்திரவதையோ இல்லாததால் இதனைச் சிறந்ததொரு முறையென அவர் கருதுகின்றார். அதற்கு முன்னர் இமாம் மாலிக் உபாயங்களைப் பயன்படுத்துவது வெறுக்கத் தக்கதெனக் கூறியிருந்தபோதிலும் இப்ன் ஹஸ்ம் அதனை ஏற்காமல் மாலிக்கின் வாதங்களை மறுத்துரைத்துள்ளார். எனினும் இமாம் மாலிக் அவர்களின் நிலைப்பாடு இஸ்லாமிய சட்டக் கோட்பாடு களுக்கு இணக்கமானதாகும். எல்லாவற்றுக்கும் மேலாக உபாயம் ஒருவரது தேர்வையும் அவர் தானாகவே முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொள்வதனையும் செல்லுபடியற்றதாக்குகின்றது - அதில் குற்றஞ் சுமத்தப்பட்டவருக்குத் தீங்கிழைத்தலோ அல்லது தீங்கிழைப்பது தொடர்பான அச்சுறுத்தலோ சம்பந்தப்படாமல் இருந்தாலும் சரியே.

---

57. அனஸ் இப்ன் மாலிக் அறிவிக்கும் இந்த ஹதீஸ் புஹாரி, முஸ்லிம், அபூ தாவூத், இப்ன் மாஜா, இமாம் அஹ்மத் முதலியோரின் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளது.

58. இப்ன் ஹஸ்ம், *அல்முஹல்லா*, பாகம் 11, ப 142

*உண்மையில் பலாத்காரத்துக்கு எதிரான தடை, குற்றஞ் சுமத்தப் பட்டவருக்கு தீங்கிழைக்கும் விடயத்தை விட அவரது சுயதேர்வு உரிமைக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அதிலேயே இஸ்லாம் உறுதியாக இருக்கிறது.*

## குற்றஞ் சுமத்தப்பட்டவர் சுயமாக குற்றத்தை ஒப்புக்கொள்ளலும் சொன்னதை மீளப் பெறுதலும்

*குற்றஞ்சாட்டப்பட்டவர் பொறுப்பை ஒப்புக்கொண்டதிலிருந்து பின்வாங்கல் தொடர்பான உரிமைகள் இருவகைப்படும்.*

*முதலாவது ஒப்புக்கொண்டதிலிருந்து பின்வாங்கல் செல்லுபடியா கின்ற நிலைமையில் இருக்கும் உரிமைகள். இவை ஹுதூத் என்னும் அல்லாஹ்வுக்குரிய உரிமைகள். இவை சம்பந்தமாகச் சந்தேகங்கள் எழும்போது இவை விட்டுக்கொடுக்கப்படலாம். இவ்வாறு ஹத் குற்றத் துக்காக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் தான் கூறியதை மறுத்துரைத் தால் அவரது முதல் ஒப்புதல் பொய்யானதாகவும் பின்னர் கூறுவது உண்மையானதாகவும் இருக்க வாய்ப்பு உண்டு. சந்தேகம் ஏற்படும் போதெல்லாம் ஹத் தண்டனை விட்டுக்கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக விபச்சாரம் புரிந்ததாக ஒப்புக்கொண்ட ஒருவர் தனது குற்ற ஒப்புதலை மீளப் பெற்றால் இத்தண்டனை விட்டுக்கொடுக்கப் படலாம். இப்ன் அபூ லைலா, உத்மான் அல் பத்தீ, இப்ன் அபீ தவ்ர் போன்ற 'அஹ்லுல் ளாஹிர்' எனும்நேரடிப் பொருள் காணும் பிரிவினரைத் தவிர செவ்வியல் சட்ட அறிஞர்கள் அனைவரும் இதில் உடன்பாடு கண்டனர்.[59] எனினும் சந்தேகத்துக்கு இடமிருப்பின் மட் டுமே மீளப்பெறுதல் அனுமதிக்கப்படும் என்ற கருத்தை இமாம் மாலிக் கொண்டிருந்தார். உண்மையில் மீளப் பெறுதல் சந்தேகத்துக்கு வழி வகுக்காத நிலையையிட்டு, இமாம் மாலிக்கின் இருவகை அபிப் பிராயங்கள் உண்டு. அது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதே அதிகம்*

---

59. பார்க்க: *அல் இஃப்ஸாஹ்*, பாகம் 2, ப406; *கஷ்ஃப் அல் கினா*, பாகம் 6, ப 99; *அல் கவானீன் அல் ஃபிக்ஹீயா*, ப 344; *பிதாயத் அல் முஜ்தஹித்*, பாகம் 2, ப 477; *முக்னி அல் முஹ்தாஜ்*, பாகம் 4, ப 150. *பதாயீ அல் ஸனாயீ*, பாகம் 7, ப 61; *அல் மப்ஸூத்*, பாகம் 9, ப 94

*அறியவந்துள்ள கருத்து. அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்ற கருத்து அதிகம் அறியப்படவில்லை.*[60]

*திருடுதல், மதுவருந்துதல் போன்றவற்றுக்கான 'ஹத்' தண்டனை களைப்பற்றி சட்டக் கருத்துகளில் வேறுபாடுகள் எழுந்தன. பொய்க் குற்றம் சுமத்துதலைப் (கத்ஃப்) பொறுத்தமட்டில் மீளப்பெறுதல் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கலாமெனச் சட்ட அறிஞர்கள் பொதுவாக ஒப்புக்கொண்டனர். (ஆயுதம் தாங்கிய) வழிப்பறிக் கொள்ளை விடயத்திலும் அவர்கள் வித்தியாசமான அபிப்பிராயம் கொண்டிருந்தனர். (நிரபராதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய) பொய்க் குற்றச்சாட்டு விவகாரம் போன்றவற்றில் பாது காப்புத் தேவைப்படுகின்ற மனிதர்களின் உரிமைகள் சம்பந்தப் பட்டிருப்பதால், இவ்வகையான குற்றங்களில் மீளப் பெறுதல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பது ஒரு வகையான கருத்து. விபச்சாரக் குற்ற விடயத்தில் மீளப்பெறுதல் ஏற்றுகொள்ளப்படலாம் என்பது போல் இவற்றிலும் மீளப்பெறுதல் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பது இன்னொரு கருத்து.*[61]

*'ஹத்' குற்றத்தில் குற்ற ஒப்புதலை மீளப் பெறுவதற்கான சான்று பின்வரும் ஹதீஸிலிருந்து பெறப்படுகின்றது. விபச்சாரக் குற்ற ஒப்புதலிலிருந்து தப்பிக்கொள்வதற்காக மாயிஸுக்கு நபி (ஸல்) அவர்கள் "நீர் வெறுமனே முத்தமிட்டிருக்கவோ அல்லது உடம்பைத் தொட்டிருக்கவோ அல்லது வெறுமனே பார்த்திருக்கவோ கூடுமல் லவா" என்றவாறு தூண்டுதல் வழங்கினார்கள். மீளப்பெறுதல் ஒரு தேர்வாக இல்லாதிருப்பின் இங்கு அறிவிக்கப்படுவதுபோல் நபி (ஸல்) அவர்கள் தூண்டுதல் வழங்கியிருக்க மாட்டார்கள். "நான் எனது குற்ற ஒப்புதலை மீளப்பெறுகின்றேன்" எனக்கூறிப் பிரகடனஞ் செய்வதன் மூலம் அல்லது தண்டனை நிறைவேற்றப்படவேண்டிய இடத்திலிருந்து தப்பியோடிக் குறிப்பால் உணர்த்துவதன் மூலம் குற்ற ஒப்புதலை மீளப்பெற முடியும். அதே போன்று, நீதிபதி தீர்ப்பு வழங்குவதற்கு முன்னரோ அதற்குப் பின்னரோ குற்ற ஒப்புதலை மீளப் பெறலாம்.*

---

*60. பார்க்க: இப்ன் ருஷ்த், பிதாயத் அல் முஜ்தஹித் பாகம் 2, ப 477.*

*61. பார்க்க: அந் நவவீ, அல் முஹத்தப், பாகம் 2, ப 364.*

*இரண்டாவதாக குற்ற ஒப்புதலை மீளப்பெறுவது செல்லுபடியா காது எனக் கருதப்படும் நிதி சம்பந்தப்பட்ட அல்லது சம்பந்தப்படாத உரிமைகள் உள்ளன. இவை மக்களின் உரிமைகளாகும். குற்ற ஒப்புதலை மேற்கொள்பவருக்கு இன்னொருவரின் சொத்தின்மீது உரிமை கிடை யாது. எனினும் குற்ற ஒப்புதல் இன்னொருவருக்காக அது போன்ற உரிமையை நிறுவுவதால், குற்ற ஒப்புதலை மீளப்பெறுதல் இன்னொரு வரின் உரிமையை செல்லுபடியற்றதாக்குகின்றது. இக்காரணத்தால் பிரகடனம் மூலம் அல்லது குறிப்பாலுணர்த்துதல் மூலம் மேற்கொள் ளப்படும் அவ்வாறான மீளப்பெறுதல் ஏற்றுக்கொள்ளாமல் விடப் படலாம்.*

## குற்றஞ் சுமத்தப்பட்டவர் தவறான தீர்ப்புக்காக நஷ்டஈடு கோரல்

*முன்னெச்சரிக்கையாகத் தடுப்புகாவலில் வைக்கப்பட்ட ஒருவர் பின்னர் நிரபராதியென நிரூபிக்கப்பட்டால் அவருக்கு நஷ்டஈடு வழங்குமாறு ஷரீ’ஆ கூறுகிறது என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். வழக்கொன்றை அதிகாரிகள் பிழையாகக் கையாண்டதன் விளைவாக ஒரு தாய்க்குக் குறைப்பிரசவம் ஏற்பட்டு அதற்காக அவருக்கு நஷ்டஈடு வழங்குமாறு அலீ (றழி) தீர்ப்பளித்ததை அவர்கள் இதற்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். ஒரு பெண் அவளது கணவன் வெளியில் இருக் கும்போது ஆண் விருந்தினர்களை உபசரித்தாள் என உமர் இப்ன் கத்தாப் (றழி) அவர்களிடம் அறிவிக்கப்பட்டது. இது கண்டனத்துக் குரியது எனக் கருதிய உமர் அதனை விசாரணை செய்வதற்காக ஒரு வரை அனுப்பிவைத்தார். அப்பெண்ணின் நடத்தையை விசாரணை செய்வதற்காக உமர் அழைப்பாணை விடுத்திருக்கிறார் எனக் கூறப் பட்டதும் அப்பெண் கலவரமுற்று “எனக்கு நாசம்தான்! உமர்போன்ற ஒருவரை நான் எப்படி எதிர்கொள்வேன்?” என அலறிக்கொண்டு சென்றாள். வழியில் அவளைப் பயம் கவ்விக் கொண்டதோடு அவளுக்கு பிரசவ வலியும் ஏற்பட்டது. தொடர்ந்து செல்ல முடியாத நிலையில் அவள் ஒரு வீட்டில் தங்கினாள். அங்கு உடனடியாக அவள் ஒரு குழந்தையைப் பிரசவித்தாள். பிரசவமான குழந்தை இருமுறை வீறிட்டு அழுதுவிட்டு இறந்துபோயிற்று. இதனையிட்டு உமர் பல தோழர்களின் ஆலோசனையை நாடினார். நடந்ததற்கு அவர் பொறுப்பல்ல என்றனர்அவர்கள். பின்னர் அவர் மௌனமாக நின்றி*

ருந்த அலீ (றழி) அவர்களை நோக்கி அவரது கருத்தை வேண்டினார். "அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துப்படி ஆலோசனை வழங்கியிருந் தால் அக்கருத்து தவறானது. உங்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் அவ்வாறு கூறியிருப்பின் அந்த ஆலோசனையினால் உங்களுக்கு நன்மை ஏற்படப்போவதில்லை. என்னுடைய கருத்துப்படி அதற்கு நீங்கள்தான் பொறுப்பு. நீங்கள் அதற்காக இரத்தப்பணம் (தியாஹ்) செலுத்தவேண்டும். மேலும் நீங்கள்தான் அவளுக்குப் பீதியை உண்டுபண்ணியுள்ளீர்கள். நீங்கள் அவளுக்குப் பீதியை உண்டு பண்ணியிருக்காவிட்டால் அவளுக்கு குறைப்பிரசவம் நேர்ந்திராது" எனப் பதிலளித்தார் அலீ (ரழி). உடனே அவளுக்குப் பணம் செலுத்து மாறு கட்டளையிட்டார் உமர் (ரழி).[62]

ஹன்பலி மத்ஹபின்படி இரத்தப்பணம் செலுத்தும் பொறுப்பு ஆட்சியாளருடையது. இதே காரணத்தால் தாயும் இறந்திருப்பின் அதற்கான இரத்தப்பணத்தையும் ஆட்சியாளர் செலுத்தியிருக்க வேண்டும்.[63] குழந்தை தான் செய்யாத குற்றத்திற்காக இறந்துள்ளது. 'ஹத்' தண்டனை காரணமாக கர்ப்பிணிப் பெண்ணொருத்திக்குக் குறைப்பிரசவம் நேர்ந்தால் அதற்கு ஆட்சியாளர் இரத்தப்பணம் செலுத்தவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி இவ்விடயத்தில் ஷாஃபியீ சட்ட அறிஞர்கள் ஹன்பலி மத்ஹபினருடன் இணக்கம் கண்டுள்ளனர்.[64]

'ஹத்' தண்டனை விதிப்பது ஆட்சியாளரின் கடமை. அவர்கள் இந்தக் கடமையில் தவறினால் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராகப் பாவம் புரிந்தோராவர். கணவன் வீட்டில் இல்லாதபோது அந்நிய ஆண்களை உபசரித்தமை சர்ச்சைக்குரிய விடயமே. அது சமூகத்

62.இச்சம்பவம் பின்வரும் நூல்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. அப்த் அல் ரஸ்ஸாக், *அல் முஸன்னப்*, பாகம் 9, ப 454, பாகம் 10, ப 18, பாகம் 11, ப 18; இப்ன் குதாமாஹ், *அல் முக்னி*, பாகம் 9, ப 579; இப்ன் ஹஸ்ம், *அல் முஹல்லா*, பாகம் 11, ப 24; அந் நவவீ, *அல் முஹத்தப்*, பாகம் 2, ப 192.

63. இப்ன் குதாமாஹ், *அல் முக்னி*, பாகம் 9, ப 579.

64. கர்ப்பிணிப்பெண் பிரசவமாகி அக்குழந்தை பால்குடி மறக்கும்வரை அவள்மீது ஹத் தண்டனை நிறைவேற்றப்பட முடியாது. என்றபோதிலும் ஏதேனும் தவறு நேர்ந்து அவள் தண்டிக்கப்பட்டால் அதன் விளைவு களுக்கு இமாமே பொறுப்பாவார்.

தீமைக்கு இட்டுச்செல்லாதவாறு அதிகாரத்தில் உள்ளோர் அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலே விவரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்விவகாரம் வேறுவிதமாகக் கையாளப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதி அலீ (றழி) இந்நிலைப்பாட்டை எடுத்திருத்தல் கூடும். பீதியுறச் செய்யும் வகையில் அல்லாமல் அப்பெண்ணின் இல்லத்தில் அவளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கலாம். ஆட்சி யாளர் யாருடனேனும் பேச வேண்டிய தேவையேற்பட்டிருப்பின் கடுமையான முறையிலல்லாமல் அவரை கௌரவமாக இங்கிதமான முறையில் அழைத்திருக்கவேண்டும் என்பதையே அலீ (றழி) இங்கே கருதியிருக்கிறார் போலும். குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பொருத் தமான முறையில் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பின் ஆட்சியாளர் தம் உரிமை விடயத்தில் வரம்பு கடக்கவோ குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமையை மீறவோ நேர்ந்திருக்காது. அதன் விளைவாக இத்தகைய பொறுப்புக்கு ஆளாகியிருக்கவும் மாட்டார்.[65]

அப்பெண் மீது குற்றஞ் சுமத்தப்படுவதற்கு முன்பாகவே, உமர் அவள்மீது எதற்காக அழைப்பாணை விடுத்தார் என அவள் அறிவதற்கு முன்பாகவே, அவளுக்குப் பிரசவம் நேர்ந்ததென்பதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். எனவே தடுப்புக் காவலில் இருக்கும் போது மரணமடையும் ஒருவருக்கு ஆட்சியாளர் இரத்தப்பணம் செலுத்த வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இதனை எடுத்துக் காட்டுவது கடினமாகும். எனினும் சமூகத்தினதும் குடிமக்களினதும் உரிமைகளப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் தவறு ஏற்படும்போது அதற்குப் பரிகாரமாக அரசு நன்மை செய்ய விழை கின்றமை நிச்சயமாக ஷரீ'ஆவின் கொள்கைகளுக்கு விரோதமாகாது.

---

65.இவ்வகை விவகாரங்களுக்கு இமாமோ அவரது பிரதிநிதிகளோ பொறுப் பாகமாட்டார்கள் என்பது ளாஹிரி சட்ட நிபுணர்களின் கருத்து. பார்க்க: இப்ன் ஹஸ்ம், *அல் முஹல்லா,* பாகம் 11, ப 24-25. ஹத் தண்டனை மற்றும் தஃஸீர் தண்டனை பற்றி மாவர்தீ, அபூ யாஃலா ஆகிய இருவரும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். கைதிக்கு மரணம் சம்பவித்தால் மட்டுமே இமாம் பொறுப்பாவார் என இவர்கள் கருதினர். பார்க்க: மாவர்தீ, *அல் அஹ்காம் அல் ஸுல்தானீயாஹ்,* (238), அபூ யாஃலா, *அல் அஹ்காம்* (282).

*இது மன்னிப்பு கேட்டல், நஷ்டஈடு வழங்கல், சட்ட ரீதியாக ஈடு செய்தல் போன்ற வடிவங்களைப் பெறலாம். உண்மையில் இக்கோட்பாடுகள் இவ்வாறான நடவடிக்கைகளை ஊக்குவிக்கவே செய்யும். கஃப்பாரி கோத்திரத்தைச் சேர்ந்தவரைத் தடுத்துவைத்தமைக்காக நபி (ஸல்)அவர்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்டதுடன் தனக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரும்படியும் தனக்காகப் பிரார்த்தனை புரியும்படியும் அம்மனிதரைக் கேட்டுக்கொண்டார்கள். அம்மனிதர் அவ்வாறு செய்யவும் உடனே நபி பெருமான் (ஸல்) அவர்கள் அம்மனிதர் வீரமரணமடைய வேண்டுமென அல்லாஹ்விடம் துஆ கேட்டார்கள். நபி (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை அது சாதாரண மன்னிப்புக்கோரல் மாத்திரமன்று. நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளால் விளையும் துன்பங்களுக்குப் பரிகாரமாக குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தின் பிழையற்ற தன்மையையும் அது எடுத்துக் காட்டுகின்றது.*

*மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள உரிமைகள், சிறப்புரிமைகள் மீது அத்துமீறும் வகையில் சில ஆட்சியாளர்கள் புரியும் அடக்கு முறையான, கொடுங்கோன்மையான நடவடிக்கைகள் விடயத்தில், விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் புரியும் இத்தீமைகளுக்கு ஏனையவர்களைப் போன்று அந்த ஆட்சியாளர்களும் அவர்களது அதிகாரிகளுமே பொறுப்புக்கூற வேண்டும் என்பதை முழு உம்மத்தும் ஏற்றுக் கொள்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக நபி (ஸல்) அவர்கள் இந்த விடயத்தில் தங்கள் மீதே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.*

*இறுதியாக, ஆட்சியாளர் விடும் தவறுகளுக்கான அல்லது அவர்களது அத்துமீறல்களுக்கான நஷ்டஈடு, அவரது சொந்த செல்வத்திலிருந்தா அல்லது அவரது குடும்பத்தினர் மற்றும் அயலவர்களிடமிருந்தா அல்லது 'பைத்துல்மால்' என்ற பொது நிதியத்திலிருந்தா அறவிடப்படவேண்டும் என்பதையிட்டு அபிப்பிராயபேதம் நிலவுவதோடு அது தொடர்பான ஒவ்வொரு கருத்துக்கும் ஆதரவாளர்கள் இருக்கின்றனர்.* [66]

---

*66. முந்திய அடிக்குறிப்பில் பட்டியலிடப்பட்டுள்ள ஆதாரங்களைப் பார்க்க.*

## முடிவுரை:

*இஸ்லாத்தில் உள்ள குற்றம் சுமத்தப்பட்டவருக்குரிய அனைத்து உரிமைகளையும் இங்கு எடுத்துரைப்பது எனது நோக்கமன்று. ஆனால் முக்கியமான சில உரிமைகளையே நான் குறிப்பிட்டுள்ளேன். அல்லா விடின் குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஆளுமையையும் கண்ணியத்தையும் பாதுகாப்பதற்காக வரையறுக்கப்பட்ட சட்ட வழிமுறைகள் நிபந்தனை கள், ஒழுக்க முறைகள், அனைத்தையும் நான் மீளாய்வு செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கும். சில முஸ்லிம் பெரும்பான்மை அரசுகள் மனித உரிமை களையும் கண்ணியத்தையும் அலட்சியம் செய்து, இவ்வுரிமைகளைப் பாதுகாப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை வேண்டு மென்றே உதாசீனம் செய்வது வெட்கக் கேடானதாகும். சில முஸ்லிம் நாடுகளில் இஸ்லாத்துடன் தொடர்புடைய அநேகர் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் சாபக்கேடாக மாறியுள்ளனர் என்பதே உண்மை. அவர்களின் அடக்குமுறைகள் இஸ்லாத்தையும், நீதியை உயர்த்திப் பிடிக்கும் அதன் பண்பையும் கொச்சைப்படுத்தவே துணைபோகின் றன. அவர்கள் தமது பிரஜைகளின் வாழ்க்கையை நரக அனுபவமாக மாற்றியுள்ளனர். இதன் விளைவாக உலகின் ஏனைய சமூகங்கள் முஸ்லிம்களை பொதுவாகவே கொடூரமானவர்கள், கொடுங் கோன்மையானவர்கள் என்றே நோக்குகின்றன. இதற்குக் காரணம் இந்த ஆட்சியாளர்களின் மிலேச்சத் தன்மையும் மனித கண்ணியத்தை மதிக்காத பண்புமாகும். இதனால்தான் உலக சமூகம் எதற்காகவும் முஸ்லிம்களின் எதிரிகளுடன் அணிசேரத் தயாராக இருக்கின்றது. முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என அவர்கள் கருதுவதே இதற்குக் காரணம். ஏனெனில் தமது சொந்தப் பிரஜைகளின் உரிமைகளில் அத்துமீறி, அவர்களுடைய புனிதத் தன்மையைக் கெடுக்கின்றவர்கள் அவர்களின் பகைவர்களுக்கு எதிராக ஆக்கிரமிப்புச் செய்ய மாட்டார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்?*

---



கெய்ரோவின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் ஈட்டிக் கொண்ட தாஹா ஜாபிர் அல் - அல்வானி (1935-2016), ஐக்கிய அமெரிக்காவின் Graduate School of Islamic and Social Sciences (GSISS), Fiqh Council of North America ஆகியவற்றின் தலைவர். The International Institute of Islamic Thought இன் ஸ்தாபக உறுப்பினர், முன்னாள் தலைவர். OIC Islamic Fiqh Academy உறுப்பினர். அறபு மொழியில் வெளிவந்துள்ள அன்னாரின் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் ஏராளம். ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கன:

Source Methodology of Islamic Jurisprudence; Towards a Fiqh for Minorities; The Ethics of Disagreement in Islam; Ijtihad; The Quran and the Sunnah: Time – Space Factor; Issues in Contemporary Islamic Thought; Islamic Thought: An Approach to Reform.




Published by
**Fuzin Texts**
23/3 Market Road,
Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-51-7